# தமிழ் இசைச் சங்கம்

விழா-சிறப்பு மலர்




31—வது

1973—74

# மகிழ்வொடு வாழ்க

ஞானச் சுடரே
விநாயகப் பொருளே
மோனத் தமிழில்
முழுமனம் இழைய
மாநிலத்தே யாம்
மகிழ்ந்திட வருகவே!

உங்கள் உளம் கவர்ந்த.

*For* ___

# Quality Printing

**AND**

# Block Making

**Leading Printers of the City:**

**Mass Media & Publications Private Limited**

38-39, Mount Road, Madras-32.

Phone: 22137

*With best compliments*
*from*

# SOUTH INDIA STEEL AND SUGARS LTD.

STEEL SALES DIVISION

99, ARMENIAN STREET

MADRAS-600 001

Grams: "STEELSTOCK", MADRAS

Phone: 29341

# HINDUSTAN ELECTRONIC COMPONENTS

*Manufacturers & Dealers of*

**WIREWOUND RESISTORS, TOROIDALLY WOUND RHEOSTATS, POTENTIOMETERS, SLIDING RHEOSTATS, FUSES, ETC., ETC.**

10-E, M.E.S. ROAD, TAMBARAM (East)

MADRAS-600059.

**Phone: 48271**



*With best compliments from*

# PERMALI WALLACE LTD.

Post Box No. 38

BHOPAL-8

***Manufacturers of Laminated Insulation Materials***

*Range of Products*

**PERMALI** **PERMAWOOD**
**PERMATRED** **HYDULIGNUM**
**PERMAGLASS** **PERMACAST**

*for*

Switchgear, Transformer, Controlgear, Rectifier, Tap Changers,
Rotating Machines, Cranes, Electric Locomotives.
Railways, Roadways, Aircrafts, Ships.
Steel Plants, Paper Mills, Rayan Plants, Textile Mills, etc.

## *Fund a Mental Problem*

Limited resources pose a fundamental problem.
INDIAN BANK accepts and discharges responsibility for extending adequate credit assistance in many ways to viable enterprises, including those by technocrats.

Likewise, seeing their savings grow poses a different kind of problem for some others; to them INDIAN BANK offers innumerable custom-built deposit schemes.

Call at our nearest branch.

# INDIAN BANK

**(Wholly owned by Govt. of India)**

*Head Office:*

**17, NORTH BEACH ROAD,**

**MADRAS-600001**

***BRANCHES ALL OVER INDIA***

Grams: "CREAMLAID" Phone: 21177

*With the best compliments from:*

# K. L. N. PAPER TRADERS

**289, N. S. C. BOSE ROAD (Post Box No. 1629) MADRAS-1**

★

*Partners:*

**Sri. AL. LAKSHMANAN Sri. L. ANNAMALAI Sri. L. ALAGAPPAN**
**Smt. KL. VALLIAMMAI ACHI Smt. R. UMAYAL**

★

*Sole Distributors for:*

Messrs. STRAW PRODUCTS LIMITED

**PAPER**
(For Madras State)

**BOARDS**
(For Madras & Kerala States)

# THE MAHALAKSHMI TEXTILE MILLS LIMITED

**PASUMALAI, MADURAI-4.**

Telegrams :
"MAHALAXMI"
Madurai.

Telex No. (044)—225
Answer Back Code:
"MALAXMI—MA"

Telephone :
Office: 30377, 30378, 30379
Res: 23093 & 22078

*Manufacturers of:*

**BEST WARP YARNS**

★

*Counts:*

10s to 60s IN HANKS, CONES
AND DOUBLE YARNS

**RING SPINDLES: 39136 — DOUBLING SPINDLES: 3940**

*Managing Director:*

L. ALAGUSUNDARAM CHETTIAR

*With best compliments from*

# SOUTH INDIA STEEL AND SUGARS LIMITED

*Manufacturers of:*

## SWEETEST WHITE CRYSTAL SUGAR

●

*Registered Office:*

"SOUTH INDIA HOUSE"

99, ARMENIAN STREET,

MADRAS-600001.

Phone: 29341 Grams: "STEELSTOCK"

●

*Sugar Factory:*

MUNDIYAMPAKKAM,

VILLUPURAM TALUK,

SOUTH ARCOT DISTRICT,

TAMIL NADU.

Phone: 335 VPM Grams: "SISSUGARS" VIKRAVANDI

*With the compliments*

*of*

MAHINDRA AND MAHINDRA LIMITED

BOMBAY — CALCUTTA — DELHI — MADRAS

*With the compliments*

*of*

# AUTOMOBILE PRODUCTS OF INDIA LIMITED

BOMBAY / AURANGABAD / LUCKNOW

•

*Manufacturers of:*

LAMBRETTA SCOOTERS AND 3 WHEELERS

API CLUTCH SYSTEMS, API BRAKE SYSTEM

AND STEERING LINKAGES

Grams : "RESOLAB" Post Box No. : 162 Telephone : 23311, 23312 & 24336

# SP. M. MEDICAL MART

**15, EAST CHITRAI STREET, MADURAI-1.**

THE HOUSE FOR ALL
MODERN MEDICINES AT BEST RATES

★

*Branches* :

(i) 45, Krishnarao Tank Street, Madurai-1.
(ii) 97, Palace Road, Madurai-1.
(iii) 157, East Marret Street, Madurai-1.
(iv) 103, Vakil New Street, Madurai-1.
(v) 50, Kannamman Kovil Street, Tirunelveli Junction

★

*SISTER CONCERNS :*

**SP. M. MEDICALS**
15-17, NORTH VELI ST.,
YANAIKKAL, MADURAI-1.

**KUMAR MEDICALS**
52, WEST SANDAIPETTAI ST.,
MADURAI-1.

★

NIGHT AND DAY SERVICE AVAILABLE AT OUR
97, PALACE ROAD BRANCH SHOP, MADURAI-1.
where
OXYGEN CYLINDERS also can be had for emergency requirements.

*Please Visit :*

**ROHINI CLINICAL LABORATORY**

**15-17, North Veli Street, (Upstairs), Yanaikkal, MADURAI-1**

FOR ALL RELIABLE PATHOLOGICAL TESTS Phone : 24111

# உள்ளே

1. எனது ஆவல் ... 16
—சங்கம் நிறுவிய தூங்கர்

2. காணிக்கை ... 14
—டி. எஸ். கச்சாபிகேசன்
—மு. அ. சிதம்பரம்

3. தலைமை உரை ... 33
—திருமதி டி. கே. பட்டம்மாள்

4. தொடக்க உரை ... 41
—திரு. பி. ஆர். கோகுலகிருஷ்ணன்

5. இசைப் பேரறிஞர் எம். எம். தண்டபாணி தேசிகர் ... 51

6. பட்டம் பெறும் பட்டம்மாள் ... 53

7. நாதசுர மேதைகள் கீரனூர் சகோதரர்கள் ... 57
—தஞ்சை B. M. சுந்தரம்

8. சங்கீத வித்வான் மன்னார்குடி ராஜகோபால பிள்ளை ... 62
—ரா. கிருஷ்ணமூர்த்தி

9. இசைப் பேரறிஞர் பி. எஸ். வீருசாமி பிள்ளை ... 65

10. தமிழிசைக் கல்லூரி தென்சென்னைக் கிளை ... 67
—ம. ப. பெ. தூரன் அவர்களின் உரை

11. எளியேனை மறந்த நியாயம் ... 73

12. இசையரங்கு நிகழ்முறை ... 88

13. இசைப் பேரறிஞர் பி. சாம்பமூர்த்தி ... 113

14. இசைப் பேரறிஞர் பாபநாசம் சிவன் ... 114

பதிப்பாசிரியர் :

**பேராசிரியர் அன்பு கணபதி**

# தமிழ் இசைச் சங்கம், சென்னை

(பதிவு பெற்றது)

## ஆட்சிக் குழுவினர்

தலைவர் :

திரு. டி. எம். நாராயணசாமிப் பிள்ளை

துணைத் தலைவர் :

டாக்டர் இராஜா சர். மு. அ. முத்தையாச் செட்டியார்

உறுப்பினர் :

திரு. வி. எஸ். தியாகராஜ முதலியார்
„ பி. வி. ஆர்எம். குழந்தையன் செட்டியார்
„ ஆர். கே. வேங்கடாசலம் செட்டியார்
„ எல். அழகுசுந்தரம் செட்டியார்
„ ஓ. எம். எஸ்பி. எல். எம். மெய்யப்பச் செட்டியார்
„ ஆர். இரத்தினசபாபதி செட்டியார்

கௌரவச் செயலாளர்கள் :

இராவ்பகதூர் டி. எஸ். கச்சாபிகேச முதலியார்
திரு. மு. அ. சிதம்பரம்



# காணிக்கை

தமிழிசை முப்பத்தொன்றும் ஆண்டு விழா 21–12–73 வெள்ளியன்று தொடங்குகிறது. 1–1–74 வரையில் தொடர்ந்து 12 நாட்கள் இசை, நாடக நிகழ்ச்சிகள் நடைபெறும்.

உயர்நீதி மன்ற நீதிபதி திரு. பி. ஆர். கோகுலகிருஷ்ணன் அவர்கள் தொடங்கி வைக்க, திருமதி டி. கே. பட்டம்மாள் அவர்கள் விழாவுக்குத் தலைமை ஏற்கிறார். இசைப்பேரறிஞர் என்ற பட்டமும் பாராட்டும் தந்து இவரை இந்த ஆண்டில் நம் சங்கம் போற்று கிறது.

22–12–73 தொடங்கி 4 நாட்கள் காலை நேரங்களில் பண் ஆராய்ச்சியின் இருபத்து நான்காம் கூட்டத்து நிகழ்ச்சிகள் நடை பெறும். இக் கூட்டத்தினை உயர்நீதி மன்ற நீதிபதி திரு. என். கிருட்டிணசாமி ரெட்டியார் அவர்கள் தொடங்கி வைக்கிறார்.

நிகழ்ச்சிகளில் வந்து கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர், பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி ஐயர், திரு. பாபநாசம் சிவன், திருவிடைமருதூர் பி. எஸ். வீருசாமி பிள்ளை ஆகிய நான்கு இசைமேதைகளை இசை உலகம் இந்த ஆண்டில் இழந்தது. இவர்கள் நால்வரும் நம் சங்கத்தின் இசைப்பேரறிஞர் விருது பெற்றவர்கள். இவர்கள் ஆன்மா சாந்தி அடைய இறைவனை வழுத்துகிறோம்.

இராஜா அண்ணாமலை மன்றம்
சென்னை-600001.
21—12—1973

டி. எஸ். கச்சாபிகேசன்
மு. அ. சிதம்பரம்
(கௌரவச் செயலாளர்)




*With best compliments from*

# KRISHNAVENI THEATRE

1-A, SOUTH USMAN ROAD

THEAGARAYANAGAR

MADRAS-17

★

*Managing Partner:*

SK. AR. SM. RAMANATHAN CHETTIAR

Phone: 441828

***Many Motorists cannot be wrong***

***why?***

- They are satisfied with the Service of their Cars etc., in our best Service Station.
- Equipped with Modern Machineries and experienced personnel for best Service.
- Cheapest Maintenance and utmost satisfaction.

**PLEASE VISIT OUR SERVICE STATION**

# B. V. GOVINDARAJULU NAIDU & CO.

*Dealers:*

**INDIAN OIL CORPORATION, Thirumayam Road, Pudukkottai**

*Kerosene Depot:*

**South 4th Street, Pudukkottai**

N.B.—We also deal in Indian Oil High Grade Lubricants, Amco Silver Cobalt Batteries & all kinds of Tyres

நல்வாழ்த்துக்கள் நல்கும்

# ஏ. எஸ். ஜி. லூர்துசாமிப் பிள்ளை அன் சன்ஸ்

திருச்சிராப்பள்ளி - 8

தந்தி : "சிகரெட்ஸ்"

| | |
|---|---|
| அலுவலகம் | : 6161 |
| வீடு | : 3339 |
| பெட்ரோல் பம்ப் | : 6111 |
| ஜங்ஷன் அலுவலகம் | : 6820 |

*With best compliments from*

# SUNDARAM INDUSTRIES

*Proprietor :*

**SOUTHERN POLYPLASTIC PRIVATE LIMITED**

*Manufacturer of :*

## HIGH DENSITY POLYTHYLENE WOVEN SACKS

*Office :*

85/86, MOWBRAYS ROAD,
ALWARPET,
MADRAS - 600018.

*Factory :*

KARAIPPAKKAM,
SHOLINGA NALLUR POST,
MADRAS - 600020.

Call Phone No. 445800 (Extn. 3)

RAJAH
SIR ANNAMALAI CHETTIAR,
OF CHETTINAD.

THE PALACE
CHETTINAD.

25. 3. 1944

உ

சிவமயம்

தொண்டாற்றுப் பெரியவர்களைத் தினந்தோறும் வணங்குவேன். அவர்களுக்குத் தொண்டு செய்வதாலேயே யான் வளர்ச்சியைப் பெற்று வருகின்றேன். தமிழ்நாடெங்கும் தமிழிசை செழிக்கவேண்டுமென்பது எனது ஆவல். பாட்டும், கூத்தும், வசனமும் என் வாழ்க்கையின் கொள்கை.



சங்கம் நிறுவிய துங்கர்
செட்டிநாட்டு ராஜா டாக்டர் சர்
மு. அண்ணாமலைச் செட்டியார் அவர்கள்



போன் நெ : 5783 EXTN.

# அசோக் பவன்

போர்டிங் & லாட்ஜிங்

ஜங்ஷன் ரோடு : : திருச்சி

திருச்சிராப்பள்ளியில் தங்குவதற்கு வசதியானது. ஜங்ஷன், திருச்சி ரேடியோ நிலையம், ராஜாஜி சானிடோரியம், பஸ் ஸ்டாண்டு முதலிய முக்கிய இடங்களுக்குச் சமீபத்தில் மகத்தான புதிய கட்டடமாக விளங்குகிறது.

நவீன சுகாதார வசதிகள் பொருந்திய காற்றோட்டமான அறைகள்,
மேலான உணவு, சிறந்த சிற்றுண்டி, மதுரமான குளிர்ந்த பானங்கள்,
அன்பான உபசரிப்பு இவையனைத்தும் ஒருங்கே பொருந்தியது.

**N.B. :—Indian Air Lines Office and Air Ceylon Office in our Premises**

*Studies in Concentration*

# THE DANCER

*Behind the seemingly effortless movement of the Bharatha Natya artiste, lies a long period of intensive training and practice. The dancer's eyes, face and hands unfold the numerous emotions of a song... made possible by deep concentration.*

Parry's too, is a long, entrancing story of concentrated effort. Started as a trading concern over 180 years ago, Parry's has, over the years, gradually widened its interests. Its record of expansion has given it new dimensions as a progressive industrial force.

E.I.D.-Parry is an industrial complex, covering Fertilisers, Pesticides, Hybrid seeds, Sugar, Confectionery, Chemicals, Engineering goods, Ceramics and Petro-chemicals. E.I.D.-Parry, with its specialised knowledge, technical know-how and long experience, is geared to play a leading role in national growth. E.I.D.-Parry's marketing organisation, with its after-sales service, is far-flung and dynamic.

**Parry's—pioneers in planned progress**

**E.I.D.-PARRY LIMITED**
*(Incorporated in England. Liability of members is limited)*
Dare House, Madras 1

FDSEID 931 B



*சித்த வைத்தியத்தின் சாதனை!*

148 ஆண்டுகளாக பரம்பரையாக, தமிழகத்தில் சித்த வைத்தியம் செய்துவரும் பரம்பரை வைத்தியக் குடும்பம். 5 தலைமுறையாகத் தொடர்ந்து வைத்திய சேவை செய்து வருகிறார்கள்.



Dr. S. R. சிவராஜ்

சேலம் சிவதாபுரம்

# சிவராஜ் சித்த வைத்தியசாலை

பிரதம வைத்தியர்

''ரகசிய வியாதி நிபுணர்''—''கவிராஜ்''

டாக்டர் S. R. சிவராஜ், R.I.M.P. & R.A.M.P.

அவர்களின் மாபெரும் சாதனையை கவனியுங்கள்

நோயற்ற வாழ்வு பெற சித்தர்களின் ஆராய்ச்சியுள்ள அனுபவபூர்வமான சித்த மருந்துகளான :

தங்க செந்தூரம் - அயதங்க செந்தூரம் – வெள்ளி பஸ்பம் - முத்து பஸ்பம் - தாதுவிர்த்தி லேகியம் – சாலாமிசிரி லேகியம் – இராஜாமிர்தம் டானிக் லேகியம் - வான்மெழுகு – ஜீவ சக்தி பில்ஸ் – ராஜ்மாத் டானிக் பில்ஸ் – ராஜ் பில்ஸ்-தாமரை தைலம் – கரிசலாங்கண்ணி தைலம் – மண்டையிடி தைலம் – வேப்பம்பட்டை தைலம் – பீனிச தைலம் – கூந்தல் தைலம் – மல சுத்திக்கு கல்ப சூர்ணம் – வாய்வு சூர்ணம் – மற்றும் அநேக மருந்துகளின் சக்தியினால், கீழ்க்கண்ட பெரிய வியாதிகளெல்லாம் டாக்டர் S. R. சிவராஜ் அவர்களின் சிகிச்சையின் மூலம் குணமடைந்து நோயற்ற வாழ்வு வாழ்ந்து வருகிறார்கள்.

சர்க்கரை வியாதி – நீரழிவு - ஆண்மைக் குறைவு – நரம்புத் தளர்ச்சி குழந்தை பாக்கியம் இல்லாமை - ஆஸ்துமா – சர்ம நோய் மூல வியாதி - பெண்களுக்கு ஏற்படும் வியாதிகள் இவைகளுக்கு ஸ்பெஷல் சிகிச்சை செய்து வருகிறார்.

பிரதி மாதம் 1, 2, 3, 4, 5 தேதிகளில்

சென்னையில்: ஸ்ரீ புவனேஸ்வரி லாட்ஜ் (போன் : 811969)

(புதுப்பேட்டை மார்க்கெட் எதிரில்)

ஹாரிஸ் ரோடு (சிம்ஸன் யூனியன் பில்டிங் சமீபம்) சென்னை-2

டாக்டர் அவர்களை நேரில் சந்தித்து மருந்துகள் பெறலாம்

ஹெட்டாபீஸ் :

**சிவராஜ் சித்த வைத்தியசாலை**

சிவதாபுரம் S.O., சேலம்.

போன் : 7550

பிராஞ்சு :

**சிவராஜ் பார்மஸி**

4105, மவுன்ட் ரோடு, சென்னை-18.

(தேனாம்பேட்டை சிக்னலுக்கு அருகில்)


HINDUSTAN
AMBASSADOR
AND HERE IT JOLLY WELL IS
THE THOROUGHBRED
FROM
SIAC STABLES
FOR THE MAN
WHO REALLY DRIVES
AMBASSADOR - The fast moving car
SOUTH INDIA AUTOMOTIVE CORPORATION (P) LIMITED
(Dealers for Madras, North Arcot, Chingleput, Nellore, Chittoor and Cuddapah Districts).
Principal Office: 24, Whites Road, Madras-14 (Phone: 84432)
Registered Office: 99, Armenian Street, Madras-1
PADA-SIAC-101



O. சின்னசாமி பிள்ளை
மானேஜிங் பார்ட்னர்

டாடா மெர்சிடைஸ் பென்ஸ், பார்கோ, P6 டீசல் என்ஜின், லேலண்டு முதலிய வாகனங்களுக்கு வேண்டிய நம்பகமானது உறுதிவாய்ந்த ஸ்பேர் பார்ட்களுக்குச் சிறந்த ஸ்தாபனம்

முருகன்
ஆட்டோமோபைல்ஸ்

பழநி ரோடு, திண்டுக்கல்.

Phone: 46 Tel: "Transports"

ஸ்டாக்கிஸ்ட்:

"BM" ஸ்பிரிங் பிளேட்ஸ்
பேட்ரீஸ் & டயர் டியூப்ஸ்

# முருகன் ஆட்டோமோபைல்ஸ்
&
# முருகன் டிரான்ஸ்போர்ட்ஸ், திண்டுக்கல்.

மக்கள் நடமாட்டம் நிறைந்த இடங்களில் உங்கள் கார்களை—லாரிகளை, மெதுவாக, கவனமாக ஓட்டிச் செல்லுங்கள்.

# பாலு சர்விஸ் ஸ்டேஷன்

கால்டெக்ஸ் டீலர்ஸ் & N. L. C. Ltd.,
டிஸ்ட்ரிபியூட்டர்ஸ்

பழனி ரோடு, திண்டுக்கல்.

போன்: 205



மானேஜிங் பார்ட்னர்: C. ராமசாமி

# South India Corporation (Private) Limited

COCHIN - 2

●

**DEPARTMENTS:**

*Hardware and Sanitary:*

MATTANCHERRY,
COCHIN - 2
Phone: 25319 & 25068

●

*Timber and Workshop:*

PALLURUTHY,
COCHIN - 5
Phone: 25325 & 24746

●

*Hardware Sales Dept.:*

ERNAKULAM - 1
Phone: 7542 & 32034

●

*Transport Clearance and Shipping:*

WILLINGDON ISLAND,
COCHIN-3
Phone: 6338 & 6336

*Civil Engineering:*

WILLINGDON ISLAND,
COCHIN - 3
Phone: 6337

●

*Civil Engineering:*

10/130, JAIL ROAD,
COIMBATORE - 18
Phone: 22375, 24132 — Res: 24850, 33781

●

*Yarn and Cloth Dept.:*

10/130, JAIL ROAD,
COIMBATORE - 18
Phone: 24132 Res.: 33615

●

*Industries Dept.:*

10/130, JAIL ROAD,
COIMBATORE - 18
Phone: 24132 Res.: 33615

**MANAGER:**

*Office:*

COCHIN
Phone: 24178

*Residence:*

ERNAKULAM
Phone: 32064

**Branch:**

"CATHOLIC CENTRE"

6, Armenian Street

MADRAS-600001

Phone: 24869, 22897 & 29836

# THE MUTHIALPET BENEFIT FUND LIMITED

(Estd : 1895) — (Tel : 23660)

**54, Thambu Chetty Street, Madras-600001.**

*Office Hours*: 8-30 to 11-30 a.m. 2-00 to 5-00 p.m.

**Except on Fridays and other Public Holidays. Sunday Working Day.**

*Accepts **Fixed Deposits** at the following rates of interest:*

**3 Months 6%** **1 Year 7½%** **3 Years 8½%**
**6 Months 6½%** **2 Years 8%** **5 Years 9%**

(Single Deposit of Rs. 10,000/- and above will fetch ½% in addition and further ½% Extra on a Single Deposit of Rs. 50,000 and above.)

INTEREST PAYABLE MONTHLY ON THE 1st OF EVERY MONTH

(On Standing instructions Interest remitted to parties or to their Bankers direct every month)

**On SAVINGS DEPOSITS 4½% (Withdrawal by Cheques)**

**Also Accepts Recurring Deposits : No Entrance Fee**

Amount receivable at the end of each period.

| Monthly Deposits | 12 months | 24 months | 36 months | 48 months | 60 months | 72 months | 84 months |
|---|---|---|---|---|---|---|---|
| Rs. | Rs, | Rs. | Rs, | Rs. | Rs. | Rs. | Rs. |
| 5 ... | 62 10 | 128 50 | 199 00 | 274 00 | 359 50 | 449 50 | 550 00 |
| 10 ... | 124 20 | 257 00 | 398 00 | 548 00 | 719 00 | 899 00 | 1,100 00 |
| 25 ... | 310 50 | 642 50 | 995 00 | 1,370 00 | 1,797 50 | 2,247 50 | 2,750 00 |
| 50 ... | 621 00 | 1,285 00 | 1,990 00 | 2,740 00 | 3,595 00 | 4,495 00 | 5,500 00 |
| 100 ... | 1,242 00 | 2,570 00 | 3980 00 | 5,480 00 | 7,190 00 | 8,990 00 | 11,000 00 |
| 200 ... | 2,484 00 | 5,140 00 | 7,960 00 | 10,960 00 | 14,380 00 | 17,980 00 | 22,000 00 |
| 300 ... | 3,726 00 | 7,710 00 | 11,940 00 | 16,440 00 | 21,570 00 | 26,970 00 | 33,000 00 |
| 400 ... | 4,968 00 | 10,280 00 | 15,920 00 | 21,920 00 | 28,760 00 | 35,960 00 | 44,000 00 |
| 500 ... | 6,210 00 | 12,850 00 | 19,900 00 | 27,400 00 | 35,950 00 | 44,950 00 | 55,000 00 |

Rs. 5/- and multiples received.

(Loans against the Paid-up Subscription can be availed of)

**LOANS :** **Rates of Interest Charged :**

On Gold Jewels ... ... 10½%

On House Properties within Madras City with Recurring Deposit system (84 months basis) upto Rs. 10,000/- ... 10½%

On House Properties within Madras City with Recurring Deposit system (84 months basis) above Rs. 10.000/- ... 12%

**ON DEPOSITS :**

Fixed Deposits ... 1½% Over and above the rate on Fixed Deposits.

Recurring Deposits ... 9% and 10½%

**C. Ramachandra Mudaliar, B.A.**
**B. Parandhama Naidu, B.Sc.,**
*Trustees.*

**P. Bhoopathi, B.Com.,**
*Secretary.*

*தமிழ் நாட்டிலிருந்து வருவது தமிழிசை!*

- தமிழ் நாட்டிலிருந்து கிடைக்கும் மற்றும் பலவற்றுள் பலரக ரயில் பெட்டிகளும் முக்கியமானதாகும்.
- 1955ல் ஒரு ரக பிராட்கேஜ் பெட்டிகள் செய்வதற்கென்றே ஆரம்பிக்கப்பட்ட சென்னையிலுள்ள இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை இதுவரை 9,000க்கும் அதிகமான பெட்டிகளை 46 ரகங்களில் செய்து முடித்திருக்கின்றது.
- இத்துடன் பர்மா, தாயவான், தாய்லாந்து, ஜாம்பியா ஆகிய தேசங்களுக்கு ரயில் பெட்டிகள், போகிகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. இப்பொழுது பிலிப்பைன்ஸ் நேஷனல் ரயில்வேக்கான ரயில் பெட்டிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

எல்லாவற்றிற்கும் மேலாக இத் தொழிற்சாலையில் தயாரித்து அறுப்பப்படும் பெட்டிகள் தமிழிசையைப் போன்றே, இனிமையான நாதத்தையும், ரஸனையையும் ஏற்படுத்துவதோடு பிரயாணிகளுக்கு சௌகரியத்தையும் பத்திரத்தையும் அளிக்கின்றன.

**இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை** (இந்திய ரயில்வே)

சென்னை - 600038

Tel: "JEWELLERY" Post Box: 14 Phone: 222

**ஸ்ரீ நடராஜ விலாஸ் ஜுவல்லரி ஹால்**



**சிதம்பரம்**

தங்கம், சில்வர், எவர்சில்வர் & எலக்ட்ரிகல்ஸ்
26, 27, 28 கடைத்தெரு, சிதம்பரம்

**ராமனுதன் மான்ஷன்**

127, கடைத்தெரு, சிதம்பரம். போன்: 411

**லாட்ஜிங் ஹவுஸ்**

காற்றேட்டமுள்ள ரூம்கள். (பாத்ரூம் & பிளஷ்அவுட் இணைப்புள்ளவைகள்) நவீன வசதிகள் நிறைந்தது. காண்டீனுடன் இணைக்கப்பட்டது.

திருமணம், விருந்துகள் நடத்த அழகிய மண்டபமும், பாத்திர வகைகளும் வாடகைக்குக் கிடைக்கும்.

கோயில், கடைத்தெரு, கோர்ட்டுகள் சமீபம்.

உரிமையாளர் :—செ. ரெத்தினசாமி செட்டியார் சன்ஸ்
S. R. பாலசுப்பிரமணியம் செட்டியார்



டாக்டர் ரா. க. சண்முகம் செட்டியார் அவர்கள்
தலைவர் (1948-49)



திரு. சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் அவர்கள்
தலைவர் (1953-56)

# பைசன் ஷோ ரூம்

மொத்தம் & சில்லறை விற்பனை நிலையம்

145, லாயிட்ஸ் ரோடு, சென்னை - 6

தலைமை நிலையம்:

பைசன் நிட்டிங் கம்பெனி, திருப்பூர்



பைசன்

பனியன்கள்


C

எல்லாவிதமான ஜவுளி ரகங்களுக்கும்

# மாரியப்பா ஸ்டோர்ஸ்

11, கொத்தவால்சாவடி திருச்சிராப்பள்ளி - 8

போன்: 4075 தபால் பெட்டி: 405

எங்களிடம்

கைத்தறி ஜவுளிகளும், பட்டுச் சேலைகளும், பென்னி, மேட்டூர் இதர எல்லாவித ஜவுளிகளும் மொத்த மாகவும் சில்லறையாகவும் கிடைக்கும்.

போன் எண்: 435 தந்தி: கண்ணபிரான் த. பெ. எண்: 7

புதுக்கோட்டை
கண்ணபிரான் சோப் ஒர்க்ஸில் தயாராகும்

# ஒட்டக மார்க் & அசோகா சோப்புகள்

ஆடைகளை வெளுப்பதில் முதன்மை பெற்றது.

K.P&C

35 ஆண்டுகளாகப் பிரசித்தி பெற்றுவரும் ஒட்டக மார்க்கு சோப்புகளை வாங்கி உபயோகியுங்கள்.

எல்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும்:

*Prop:*
K. தர்மராஜ பிள்ளை
Personal Phone No. 209

*Lessees:*
N. புருஷோத்தம ரவுத்து
Personal Phone No. 245
G. குப்பண்ண பிள்ளை & A. நாகராஜன்:


மங்கையருள் மகாராணி
வண்ணக்கோலம்
எண்ணக்கருவூலம்
சிந்தையள்ளும் சிங்காரச் சேலைகள்...
காஞ்சீபுரம், தர்மாவரம், ஆரணி
பெனாரஸ், மணிபுரி,
மைசூர், காஷ்மீர்பட்டு புடவைகள்
நைலான், எம்ப்ராய்டரி, டெர்லான்
டெரிகாட்டன், டெட்ரெக்ஸ், மற்றும்
கைத்தறி சேலைகள்
ஆடவரும், பெண்டிரும், ஆடிவரும் குழந்தைகளும் அணிந்து ஆனந்தமடைய ஆயிரக் கணக்கான துணிவகைகளை அள்ளி அள்ளி வழங்குவது உங்களின் உள்ளம் நிறைந்த கீதா
கீதா
சில்க் & சாரி பஜார்
31, 32, N.S.B. ரோடு, திருச்சி-2.

தந்தி: "டிகேட்டி" போன்: 269

எங்களது மனமார்ந்த வாழ்த்துக்கள்!

# திருப்பூர் கரூர் டிரான்ஸ்போர்ட் பிரைவேட் லிமிடெட்

தபால் பெட்டி எண்: 38 திருப்பூர்-4

மானேஜிங் டைரக்டர்:

கே. பழனிசாமி நாயுடு

தந்தி: "ஸ்வஸ்திக்" ஸ்தாபிதம்: 1944

# ஸ்வஸ்திக் வேதாரணியம் புகையிலை & வாசனை பன்னீர்ப் புகையிலை

தயாரிப்பாளர்:

ஸ்வஸ்திக் புகையிலை & தொழிற்சாலை

வேதாரணியம்

போன் நெ.: 22

சேல்ஸ் டிப்போ:

559, பூந்தமல்லி ஹைரோடு

மதராஸ்

போன் நெ.: 34913

" சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர் "

" வானம் அளந்த தனைத்தும் அளந்த
வளர் மொழி வாழியவே "

—மகாகவி பாரதியார்

" தமிழ் இசைச் சங்கம், இன்பத் தமிழ் மொழிக்கு இசையில் இடமளித்து, இசை இனிமையை எல்லோரும் அனுபவிக்க, தொண்டுசெய்து வருகிறது.

சூழ்கலி நீங்கித் தமிழ்மொழி ஓங்க, வையகம் துலங்கத் தமிழ்மொழி தன் மணம் வீசி இசைகொண்டு வழி வகுத்த தமிழ் இசைச் சங்கத்துக்கு

பாராட்டுக்கள் !

வாழ்த்துக்கள் !!

வாழ்க தமிழ் ! வாழ்க தமிழ் இசை !!

ஈசன் தொழிற்குழு :

ஈசன் இஞ்சினீயரிங் கம்பெனி லிமிடெட்
ஹாக்பிரிட்ஜ்-ஹிவிடிக் அண்டு ஈசன் லிமிடெட்
ஈஸ்வரன் அண்டு ஸன்ஸ் இஞ்சினீயர்ஸ் பிரைவேட் லிமிடெட்
ஈஸன் பிராடக்ட்ஸ் ஆப் இந்தியா பிரைவேட் லிமிடெட்

சென்னை - 600001

போன் : 22200 தந்தி : "ஜுவல்லரி"

மதுரையில்

22 ct. தங்க நகைகள் & வெள்ளிப் பாத்திரங்களுக்கு
நம்பிக்கையான ஸ்தாபனம்

**R. R. C.**

R. இராமனுதன் செட்டியார்,
40/41, கீழ ஆவணி மூல வீதி,
மதுரை - 1

என்றும்

# கோபால் பல்பொடி

உபயோகியுங்கள்

—: தயாரிப்பவர்கள் :—

**எஸ். பி. எஸ். ஜெயம் அன் கோ.,**
வேல் கெமிக்கல் ஒர்க்ஸ்,
25, கீழநாப்பாளையத் தெரு, மதுரை - 1.

போன் : 24653


குன்றாப்
புதுமைக்கும்
குறையா வனப்புக்கும்
லக்ஷ்மியின்
ப்ரீதி
ஸெமி ஃபுல்
வாயில் புடவைகள்
100% சுத்தமான எகிப்து
பஞ்சு கொண்டு
நெய்யப்பட்டது.
தி
லக்ஷ்மி
மில்ஸ்
கம்பெனி லிமிடெட்
கோயம்புத்தூர்
உயர்ந்த துணிகளின்
உன்னத சின்னம்
VSK.AND CO. LMC.608.

# The other India

There is greater awareness abroad today of the rapid growth of India's industries—and a growing demand for Indian-made consumer and industrial goods.

Textiles lead the field and Madura Mills lead in the export of textile products. High quality yarns and fabrics manufactured by Madura Mills reach as many as 26 countries around the world and earn for the country foreign exchange to the equivalent of about Rs. 7 crores annually.

Equally important: a wide range of high quality products provide raw materials for important industries, both big and small, thus encouraging the growth of ancillary industries.

With the emphasis on social responsibility, the industrial worker of today enjoys greater employment opportunities and benefits than ever before. The four units of Madura Mills provide employment for over 18,000 people, and more: benefits, services and amenities necessary for their well-being and development.

**Madura Mills**
Madurai, South India.

Bensons-2176





சங்கத் தலைவர்

திரு. தி. மூ. நாராயணசாமிப் பிள்ளை அவர்கள்



சங்கத்தின் துணைத் தலைவர்
டாக்டர் ராஜா சர். மு. அ. முத்தையா செட்டியார் அவர்கள்

தரத்துக்கும் சேவைக்கும்
தக்கதோர் சின்னமாக
விளங்கும் பெயர்

# வின்ஸென்ட்

ஸோடா, கலர், கிரஷ், கனிச்சுவை பானங்கள்
ரொட்டி, கேக், பிஸ்கட் தயாரிப்பில்
புகழ் பெற்றவர்கள்.

உபசரணை விருந்துகளுக்கு உற்றபணியாளர்கள்

தலைமை நிலையம்: திருச்சிராப்பள்ளி.
கிளைகள்: சென்னை, மதுரை, நெல்லை, சேலம், கோவை, குடந்தை, காரைக்குடி, கடலூர்.

Estd ; 1944

Phone : Head Office 216
Branch 216 A
Residence 234

உத்திரவாதமுள்ள பவுன் வைர நகைகளுக்கும்
வெள்ளிப் பாத்திரங்களுக்கும்
சிறந்த ஸ்தானம்

அ. க. தாண்டவம் செட்டியார் & சன்

★

# ஆபரண மாளிகை

★

**Head Office :**

207-208, காசுக்கடைத் தெரு, சிதம்பரம்.

**Branch :**

60-61, காசுக்கடைத் தெரு, சிதம்பரம்.

*With best compliments from*

# INDIA RADIATORS LIMITED

(Manufacturers of Radiators and Heat Exchangers for
Cars, Trucks, Diesel Locomotives and Heavy Vehicles)

❖

*IN COLLABORATION WITH*

SUDDEUTSCHE KUHLERFABRIK JULIUS FR. BEHR, WEST GERMANY

*SUBSIDIARY COMPANY*

# WESTERN THOMSON (INDIA) LIMITED

(Manufacturers of Water Thermostats for
Engine Jacket Cooling System for Automobiles)

❖

*IN COLLABORATION WITH*

WESTERN THOMSON CONTROLS LIMITED, U. K.

★

*Regd. Office:*
"SOUTH INDIA HOUSE"
99, ARMENIAN STREET,
MADRAS-600001.

*Office & Works:*
POZHAL,
MADRAS-600066.

*With the best compliments*

*from*

*Proprietor :*

G. RAJASUNDARAM, M.A., M.Litt.

**SIVAKAMI PRINTERS**

ANNAMALAINAGAR



கலையழகு மிக்க
பட்டு சேலைகள்
மற்றும்
தங்கள் குடும்பத்திற்கு
தேவையான அனைத்து
ஜவுளிகளும் நிறைந்த
ஜவுளி மாளிகை
ஆனந்தா...
SURYA
ஆனந்தா
கார்ப்பரேஷன்
(ஏர்-கண்டிஷன்ட்)
39, N. S. B. ரோடு, திருச்சி-2.
போன்: 4763

# TUBES AND MALLEABLES LIMITED

"SOUTH INDIA HOUSE"

99. ARMENIAN STREET,

MADRAS - 600 001

**Distributors for "ITC" Brand Steel Tubes 15mm to 80mm and Seamless Tubes 100mm to 150mm to IS : 1239 (Both Galvanised and Black)**

*Manufactured by :*

## THE INDIAN TUBE COMPANY LIMITED

CALCUTTA - 16

**Stockists for "Alkathene" Pipes and Alkaflan Fittings**

*Manufactured by :*

## I. C. I. (INDIA) PRIVATE LIMITED

CALCUTTA - 16

***BRANCHES ALL OVER SOUTH ZONE***

# INDIAN OVERSEAS BANK

**Introduces a Savings Surprise—A**

*LONG TERM BENEFIT DEPOSIT SCHEME*

ALL YOU PAY IS REPAID - YET ALL YOUR SAVINGS AND INTEREST REMAIN INTACT

Suppose for example, you deposit a monthly sum of Rs. 100/- for 120 months. Soon after you will be entitled to receive monthly repayment to the tune of Rs. 100/- (i.e. equivalent to your monthly deposit) for a suqsequent period of 120 months, in addition to an annual bonus of Rs. 72. Besides, at the time of closure of the account on completion of the repayment, programme, you will receive your entire savings with interest, viz. a sum of Rs. 17550/-

***Contact your nearest IOB Branch to-day***

***A visit to IOB is a satisfying experience***

*Our Branches in Madras:*

Adyar
Aminjikarai
Anna Nagar
Ayanavaram
Besant Nagar
Cathedral
Chintadripet
Choolai
Edward Elliots Road
Esplanade
Kodambakkam
Mount Road
Muthialpet
Mylapore
Nehru Park
Nungambakkam
Perambur
Peters Road
Purasawalkam
Saidapet
Santhome
Sowcarpet
Theagarayanagar
Triplicane
Washermanpet
Wall Tax Road


அனைவரும் விரும்புவது!
நிஜாம் லேடி
ஸ்பெஷல் புகையிலை
தயாரிப்பாளர்கள்:-
ஏ.எம்.அப்துல் ரஹிமான் ராவுத்தர் & கோ
தபால் பெட்டி எண்-4, புதுக்கோட்டை.
பூரண விற்பனையாளர்கள்:-
நிஜாம் ஏஜன்ஸீஸ் & டிஸ்ட்ரிபுயூட்டர்ஸ்
தபால்பெட்டி-25, புதுக்கோட்டை
நிஜாம் லேடி
T.M.R No 15871
DUTY PAID
NIZAM TOBACCO FACTORY, P.B.No 4, PUDUKKOTTAI
-அலங்காா-



தமிழிசை முப்பத்தொன்றும் விழாவைத் தொடங்கிவைக்கும்
21—12—1972

தமிழக உயர்நீதிமன்ற நீதிபதி

**திரு. பி. ஆர். கோகுலகிருட்டிணன் அவர்கள்**



தமிழிசை முப்பத்தொன்றும் விழாவில் தலைமை ஏற்கும்
21—12—1973
சங்கீதகலாநிதி திருமதி டி. கே. பட்டம்மாள் அவர்கள்

# தமிழ் இசை முப்பத்தொன்றும் விழா

**21—12—1973**

இராஜா அண்ணாமலை மன்றம், சென்னை

சங்கீதகலாநிதி டி. கே. பட்டம்மாள் அவர்களின்

## தலைமையுரை

நன்றி

உயர் நீதிமன்ற நீதிபதி ஸ்ரீ கோகுல கிருஷ்ணன் அவர்களுக்கும், ஸ்ரீ நாராயணசாமி பிள்ளையவர்களுக்கும், இராஜா சர். டாக்டர் முத்தையா செட்டியாரவர்களுக்கும், தமிழ் இசைச் சங்க செயற் குழுவினர்களுக்கும், உறுப்பினர்களுக்கும், அழைப்பிற்கிணங்கி இங்கு கூடியிருக்கும் ரசிகப் பெருமக்களுக்கும் முதற்கண் எனது வணக்கம்.

என்னை, இந்த சென்னைத் தமிழ் இசைச் சங்க 31-ம் ஆண்டு விழாவில் கலந்துகொண்டு, அதை அணுகி நடக்கும் 24-வது ஆண்டு பண் ஆராய்ச்சி மகாநாட்டிற்குத் தலைமைதாங்க அழைத்துள்ள, சங்க நிர்வாகக் குழுவினர்களுக்கு என் மனமுவந்த நன்றி.

பெண்கள் தலைமை

பெண்கள் சமஉரிமை கோரி, நாட்டின் ஆட்சி முதல் எல்லாத் துறைகளிலும் தலைமை ஏற்றுக்கொண்டு வெகு திறமையாக நடத்திவரும் இந்நாளில், சென்னை மாநகரத்தில் பிரபலமாக நடக்கும் மூன்று சங்கீத மகாநாடுகளிலும், மூன்று பெண் வர்க்கத்தினரே தலைமைதாங்க ஏற்றுக் கொண்டு நடத்துவது ஒரு அதிசயமல்ல. வெற்றிகரமாக நடத்துவார்களா என்பதில் சந்தேகமே வேண்டாம். அதி விமரிசையாக நடத்தினாலும் ஆச்சரியப் பட வேண்டாம். அவர்கள் எதை எடுத்துக் கொண்டாலும், மன உறுதியுடனும், இறுதி வெற்றியை எப்பொழுதும் அடைந்தே தீர்வார்களென்பதை, இன்று நம் ஆட்சித் தலைவர் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் அநேக துறைகளில் நிரூபணம் செய்து காட்டியுள்ளார். அம்மாதிரியே இவ்வாண்டு நடக்கும் சங்கீத கலைவிழாக்கள் மூன்றும் வெகு விமரிசையாகவும், வெற்றிகரமாகவும் நடக்குமென்பதில் சந்தேகமேயில்லை அப்படி நடத்தி வைக்க அவர்களுக்கு வேண்டிய ஒத்துழைப்புத் தர ரசிகப் பெருமக்களாகிய உங்களை வேண்டிக்கொண்டு பூரண வெற்றி கிடைக்க அருள்புரியுமாறு எல்லாம் நிறைந்த சரஸ்வதி தேவியையும், இறைவனையும் பிரார்த்திக்கிறேன்.

பெண்கள் சொத்து

தவிர, நான் மூன்று வருடங்களுக்கு முன் ஒரு சங்கீத மகாநாட்டில் சொல்லியதுபோல், நம் சங்கீதம் என்பது பண்

டைய காலம்தொட்டு பெண்கள் சொத்து. இதைச் சேக்கிழார் வெகு அழகாக அநேக இடங்களில் எடுத்துரைத்துள்ளார். ஆகையால், இவ்வாண்டு மகாநாடுகளின் அறிகுறி என்னவென்றால், அந்தக்காலம் தொட்டே இதுவரை பெண்கள் தங்கள் சொத்தை வெகு ஜாக்கிரதையாகக் காப்பாற்றிக்கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதே. நான் என் இளைய சகோதரிகளைக் கேட்டுக்கொள்வது ஒன்றுதான். அதாவது, இவ்வளவு நாட்கள் நாங்கள் காப்பாற்றிவந்த சொத்தை இனி நீங்கள் தான் ஏற்றுக்கொண்டு அதற்கு அழிவு, இழிவு ஏற்படாமல் காப்பாற்றி, பின்வரும் சந்ததியாரிடம் ஒப்படைக்க வேண்டுமென்பதுதான்.

### காப்பாற்றுங்கள்

அழிவு, இழிவு ஏற்படாமல் காப்பாற்ற வேண்டுமென்று சொல்லும் பொழுது நான் நினைப்பது என்னவெனில், நம் சங்கீதத்தை சுத்தமான முறையிலேயே வைத்துக்கொண்டு கலப்படத்திற்கு இடம் கொடுக்காமலிருக்க வேண்டுமென்பதே. இதை ஏன் சொல்லவேண்டி யிருக்கிறதென்றால், கொஞ்சகாலமாக நம் நாட்டில் ஏற்பட்டிருக்கும் சலசலப்புதான் காரணம். அதாவது, நம் கர்நாடக சங்கீதத்தரம் குறைந்துகொண்டு வருகிறது. இப்படியே போய்க்கொண்டிருந்தால் அதற்கு அழிவும் ஏற்படலாமென்ற கூக்குரல் நம் செவிகளில் அடிக்கடி கேட்கின்றது. இந்த இழிவான சொல்லுக்கு நாம் இடம் கொடுக்கக்கூடாது.

### நம் கடமை

அதற்கு வேண்டி நாம் செய்யவேண்டிய கடமை என்னவென்று என் சிற்றறிவுக்குத் தோன்றியதை நான் சொல்லலாமென நினைக்கிறேன். நம் இளம் வித்யார்த்திகள் இப்பொழுது கணக்கில் எடுக்கமுடியாத முறையில் பெருகியிருக்கிறார்கள். இது மிகவும் சந்தோஷப்பட வேண்டிய விஷயம். அப்படிப்பட்ட வித்யார்த்திகள், நல்ல முறையை அனுசரித்து, நல்ல சுத்தமான பாடாந்தரத்தைத் தவிர வேறு எதையும் ஏற்கமாட்டோமென்று பிரதிக்ஞை செய்துகொண்டு எந்த இடத்தில் சுத்தமான கலை இருக்கின்றதோ, அந்த இடங்களைத்தேடி அதில் புகுந்து பாடம் கற்று, தங்கள் தங்கள் சுயபுத்தித் திறனை அந்த சுத்தமான வரம்பிற்குள் புகுத்தி வெளிப்படுத்த வேண்டுமென்பதுதான். இது ஒரு சிரமமான காரியமல்ல. இக்காலத்தில் இதற்கென நம் அரசு முதற்கொண்டு தனிப்பட்ட ஸ்தாபனங்கள்வரை கலைக் கூடங்கள் நடத்தி வருகிறார்கள். இங்கெல்லாம் சுத்தமான சங்கீதத்தை எதிர்பார்க்கலாம். அம்மாதிரி நாம் எதிர்பார்க்கும் அளவில் இவ்விடங்களில் சுத்தமில்லையென்றால், பொதுமக்கள் அவைகளை எதிர்த்து, வேண்டிய சீர்திருத்தங்களைச் செய்துகொள்ள வேண்டும்; வற்புறுத்த வேண்டும். ஆகையால், நம் வித்யார்த்திகள்—முக்கியமாக என் இளைய சகோதரிகள்—சுத்தத்தைக் கைப்பிடித்து, தங்கள் சொத்தைக் காப்பாற்றிக் கொள்ளுவார்களென எதிர்பார்க்கிறேன்.

### சட்டவரம்பு மீறலாகாது

நான் இப்படிச் சொல்லும்பொழுது ஒரு சந்தேகம் ஏற்படலாம். அதாவது தற்காலத்திலிருக்கும் நம் திரைப்பட சங்கீதம் சுத்தமா இல்லையா என்று. இந்த ஒரு சந்தேகத்துக்கு இடமே கிடையாது. நான் சுத்தமான சங்கீத மென்னும் பொழுது, போதனா முறையைக் கையாண்டு, படிப்படியாகப் பயின்று கனமான கலையை உருவாக்கிக் கொள்வதே. ஆனால் திரைப்பட சங்கீதத்துக்கு இவ்வளவு சிரமப்படவேண்டிய அவசியமில்லை என்பது என் அபிப்பிராயம்.

சாதாரணமாக, கொஞ்சம் குரல்வசதி இருப்பவர்கள், இந்தத் துறையில் பிரகாசிக்க முடியும், பிரகாசிக்கிருர்கள் என்று சொல்லலாம். அவர்களில் அநேகர்களைக் கேட்டால், 'நாங்கள் கர்னுடக சங்கீத சாஸ்திரம் பயிலவில்லை' என்று சொல்லுவார்களென்பதில் சந்தேகம் வேண்டாம். ஆனல், அவர்களை நான் குறை கூற வில்லை. ஏனென்ருல் அவர்களும் பாமர ஜனங்களைத் தங்கள் இசையினல் சந்தோஷப் படுத்துகிருர்கள். ஆகையால் அதுவேறு துறையாகின்றது. ஒருவிதத்தில் முறையே சங்கீதம் பயிலும் வித்யார்த்திகளுக்கு அந்தத்துறை(திரைப் படத்துறை) சுலபமாகத் தோன்றும். ஆனல், அது அப்படி சுலபமும் அல்ல. அதற்குத் தனி சாதுர்யம் வேண்டும். அதில் ஒரே ஒரு குறை யென்னவெனில், அது எந்த சங்கீதச் சட்ட வரம்புக்கும் உட்பட்டதல்ல. ஆனல் நம் கன சங்கீதம் மிகவும் கடினமான சட்டத்திற்குட்பட்டது. தமிழர்களாகிய நாம் இயற்கையாகவே சட்டங்களுக் குட்பட்டவர்களாகையால் நம் வித்வான்களை சட்டத்தை மீருமலிருந்து சுத்தமுறையைக் கையாளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

நம் இளம் வித்வான்களுக்கும், வித்யார்த்திகளுக்கும், ஒன்று சொல்ல விரும்புகிறேன். இக்காலத்தில், கணக்கில்லாத சங்கீத சபாக்கள் தோன்றி யிருக்கின்றன. இது ஒரு சந்தோஷப் படவேண்டிய விஷயம். ஆனல் நம் இளம் வித்வான்கள், தங்கள் கலையை நன்கு வளர்த்துக் கொண்டு சபா நிர்வாகஸ்தர்கள் தங்களைத் தேடி வரும்படி செய்யவேண்டும். அதுதான் அவர்களுக்கும் மற்றைய சங்கீத வித்வான்களுக்கும் கௌரவமளிக்கும். தற்காலத்தில் இதற்கு மாருக நடந்து வருவதைக் கண்டும், கேட்டும் மிகவும் வருந்துகிறேன். நாட்டில் பல்வேறு துறைகளிலும் ஏதாவது சிபாரிசை வைத்துக்கொண்டுதான் காரியம் சாதிக்கலாமென்ற நிலை வந்துவிட்ட போதிலும், எல்லாவற்றிற்கும் மேலான இந்த சங்கீதக் கலைத்துறையிலும் அந்த நிலைமை வரக்கூடாது என்பது என் அவா.

## திறமைக்கு வழிவிடுக

முன்காலத்திலெல்லாம், வித்யார்த்திகள் பல வருடங்கள் ஒரு குருவினிடத்தில் குருகுலவாசம் செய்து, அவர் உத்திரவு கொடுத்தபிறகுதான் பொது இடங்களில் பாட வருவார்கள் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனல் அந்த நிலை இக்காலத்தி லிருக்கமுடியாது. ஏனெனில், இப்பொழுதெல்லாம் வித்யார்த்திகள் (சிஷ்யர்களென்று சொல்லக் கூடாது) ஒரு தனிப்பட்ட குரு என்று யாரையும் ஏற்றுக்கொள்வதில்லை. அப்படி ஒருவரை குரு என்று சொல்லிக் கொண்டாலும், உண்மையில் அவர்கள் அந்த குருவிடத்தில் மாத்திரம் பயிலாமல் மற்ற பல வித்வான்களிடமும் பாடம் கற்றுக் கொள்கிருர்கள். இந்த ஒரு அவகாசத்தினல் அவர்கள் பொதுவில் பாடவருவதற்கு யாருடைய தனிப்பட்ட உத்திரவையும் எதிர்பார்க்கவேண்டிய அவசியமில்லை. இதனல் அநேக வித்யார்த்திகளுக்கு, தாங்கள் வெகு சீக்கிரம் பொதுவில் பாடி பிரபலமாகிவிட வேண்டும் என்ற ஆவலினல், எப்படியாவது யார் சிபார்சைக் கொண்டாவது பொதுவில் பாடத் தொடங்க பிரயத்தனம் செய்கிருர்கள். அப்படிச் செய்யும்பொழுது இக்காலத்தில் நிஜமாகக் கலை உள்ளவர்களுக்குப் பலன் கிடைக்காமல், கலையைத் தவிர மற்ற அம்சங்களில் பக்கபலமுள்ளவர்களுக்கு வாய்ப்புக் கிடைத்து விடுகிறது. இப்படி ஏற்படும்பொழுது நிஜமாகக் கலையில் வல்லமையுள்ளவர்கள் மனமுடைந்து பின்தங்கி மறைகின்றனர். இந்த நிலைமையை நம் முதியோர்கள் மிகவும் ஆராய்ந்து பார்த்து தங்கள் பலங்களை உபயோகித்து மற்ற தகுதியுள்ளவர்களின் வழியை மறிக்காமலிருந்தால், நம் கலைக்கே பெருந்தொண்டு செய்வதாகும்.

## தெய்வீகக் கலை

நம் சங்கீதக்கலை ஒரு தெய்வீகம் பொருந்தியது. இதைப்பற்றி நான் விவரிக்கவேண்டிய அவசியமில்லை. பண்டைய காலம்தொட்டு, நாயன்மார்கள் முதற்கொண்டு எல்லாப் பெரியவர்களும் தெய்வங்களைச் சங்கீதம் மூலம்தான் வழிபட்டிருக்கிருர்களென்று நாம் படிக்கும் புத்தகங்களெல்லாம் கூறுகின்றன. விஞ்ஞான முறையைக்கொண்டோ, மற்ற வேறு எந்த முறையைக்கொண்டோ ஒருவரும் தெய்வங்களை வழிபட்டதாகத் தெரியவில்லை. அதனுல்தான், நம் சங்கீதக்கலையென்பது ஒரு தனிப்பட்ட கலை. அதற்கு அதிக மதிப்புக்கொடுத்து நடத்த வேண்டுமென்கிறேன்.

## இசைப் பண்களின் ஏற்றம்

இந்தக் கலையைச் சாதாரணமாக எல்லோராலும் கையாள முடியாதென்பது எல்லோரும் அறிந்த விஷயம். நம் மதாச்சாரத்தின்படி பூர்வீக ஞானத்தினுலும், பூர்வ ஜன்ம தவத்தினுலும்தான் இக் கலை ஒருவருக்கு கிடைக்குமென்பது முதியோர் மொழி. ஆதலால்தான், நிஜமாக சங்கீத ஞானம் படைத்து மேலுக்குவரும் வித்யார்த்திகளை, மற்ற பக்கபலம் மாத்திரமுள்ளவர்கள் வழிமறிக்க வேண்டாமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். இத்தருணத்தில், இந்தத் தமிழ் இசை இயக்கம் என்பது ஆரம்பிக்கப்பட்டு அதனுல் நம் ரசிகர்கள் பெற்றுள்ள நன்மையைத் தெரிவிப்பது அவசியம். நம்மில் பலருக்கு சங்கீதம் என்னும் பொழுது இசைப்பண்கள் என ஒரு சாஸ்திரம் இருக்கிறதென்று தெரியாமலிருந்தது. அம்மாதிரி ஒன்று உள்ளது எனத் தெரியப்படுத்திய பெருமை நம் தமிழ் இசைச் சங்கத்துக்கும் முக்கியமாக, காலஞ்சென்ற ஸ்ரீ ஆர். கே. ஷண்முகம் செட்டியாரவர்களுக்கும், காலஞ்சென்ற செட்டிநாட்டரசர் ஸ்ரீ அண்ணமலை செட்டியாரவர்களுக்கும்தான் உரித்தானது. அதைத் தொடர்ந்து, இவ்விழாவை நடத்திக் கொண்டுவரும் குழுவினர்கள் யாவரையும் இங்கு புகழாமலிருக்க முடியாது.

## எனக்குக் கிடைத்த புகழ்

தமிழ் இசைச் சங்கம் என்றுல் தமிழ்ப் பாட்டுக்களைத்தான் பாடவேண்டுமென்று வற்புறுத்துகிற சங்கமென்று அநேகர் தப்பான அபிப்பிராயங்கள் கொண்டிருந்தனர். ஆனுல் இதன் மூலம் தான் பண்டையகாலப் பண் பற்றி ஆராய்ச்சி செய்யப்படுகிறதென்பது தெரியவந்ததும் இச் சங்கத்தின் முக்கியத்துவம் எல்லோருக்கும் புலப்பட்டது. தமிழ்ப் பாட்டுக்களை அதிகமாகக் கச்சேரிகளில் பாடவேண்டுமென்று இச்சங்கம் துவக்குவதற்கு முன்பே, ஸ்ரீ டி. கே. சி. அவர்களும், ஸ்ரீ கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்களும் வற்புறுத்தி வந்தார்கள் என்று நான் உறுதியாகச் சொல்ல முடியும். ஏனெனில், என் சொந்த வாழ்க்கையின் நான் இந்த சங்கீதத்துறையில் நுழைந்து இளமைக்காலத்தில் எனக்கு மிகவும் ஊக்கமளித்தவர்களுள் முதன்மை ஸ்தானம் பெற்றவர், கல்கி ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி. அவருடைய ஊக்கத்தின்பேரில் தான் நான் 1936-39 வரை என் கச்சேரிகளில் நிறைய தமிழ்ப் பாட்டுக்கள்பாடி, ரசிகர்கள் அவைகளை அனுபவித்து எனக்குப் புகழ் கிடைத்ததென்று சொன்னுல் அது மிகையாகாது. இந்த இடத்தில் என்னைப் புகழ்ந்து, இன்று என்னை கௌரவிக்கும்பொழுது அவரை நினையாமலிருக்க முடியவில்லை. காலஞ்சென்ற செட்டிநாட்டரசர் ஸ்ரீ அண்ணமலை செட்டியாரவர்களும் எனக்கு மிகவும் ஊக்கமளித்ததை இன்று மறக்கமுடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## வணக்கம்

மற்றுமொருமுறை, என்னை இன்று இங்கு வரவழைத்து, என்னைக் கௌரவித்து எனக்கு "இசைப் பேரறிஞர்" என்ற பட்டத்தையும் அளித்த நம் தமிழ் இசைச் சங்க நிர்வாகக் குழுவினர்களுக்கும், முக்கியமாக தலைவர் ஸ்ரீ நாராயணசாமி பிள்ளை யவர்களுக்கும், ராஜா சர். ஸ்ரீ முத்தையா செட்டியாரவர்களுக்கும், ஸ்ரீ கச்சாபிகேச முதலியாரவர்களுக்கும், மற்றுமுள்ள நிர்வாகஸ்தர்களுக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு இந்த உரையைமுடிக்கிறேன். வணக்கம்.

ஸ்தாபிதம்: 1937 ஸ்ரீராமஜெயம் Cal. Regd. 162032

கடை போன்: 7062 வீடு போன்: 5518




# கோனூர் நெய் ஸ்டோர்

319, பெரிய கடை வீதி, திருச்சி-8

தினசரி வரும்

## சட்டி வெண்ணெய், கிறீம் வெண்ணெய்

தேவைக்கு எங்கள் **R.K.** பிராண்டு அக்மார்க் அசல் நெய் 16 கிலோ கிராம், 4 கிலோ கிராம், 2 கிலோ கிராம், 1 கிலோ கிராம், 500 கிராம் டின்களில் கிடைக்கும். உள்ளூர் ஆர்டர்களுக்கு உடனுக்குடன் சப்ளை செய்யப்படும்.




உரிமையாளர்:—ஆர் குப்புசாமிக் கோனூர்

Grams: JAYANTHI" Phone: 3323 (5 Lines)

# HOTEL JAYANTHI

SALAI ROAD - - TRICHY-18

CENTRALLY LOCATED OPPOSITE TO THILLAINAGAR ARCH (NORTH)

✸

**Single, Double Air Conditioned Rooms**
**All Bath Attached**
**Car Parking - Telephone Facilities**
**Air-Conditioned Dining Hall**

✸

## JAYANTHI RESTAURANT

VEGETARIAN NORTH AND SOUTH INDIAN DISHES

# LAVANYA

CALICO MILLS' APPROVED
EXCLUSIVE RETAIL SHOP

*FOR*
## CALI-CLOTH
**(FABRIC OF CALICO MILLS)**

★

*PROS :* **V. S. RAM & CO.**
**495, BIG BAZAAR, TRICHY - 8.**
Phone : 7992

*Branch :* **PUDUKKOTTAI**



வியாபாரிகளுக்கும் பொதுமக்களுக்கும் ஓர் நற்செய்தி !
திருச்சி – சென்னை – கரூர் தினசரி ரெகுலர் பார்சல் சர்விஸ்

## ஸ்ரீ ஐயப்பஸ்வாமி
## லாரி சர்விஸ்

37, காந்தி மணிமண்டப சாலை
திருச்சி - 8.

SILS

வீ. போன் : 5415

ஆபீஸ் போன் : 5412, 6412

செல்ப் புக்கிங் & டோர் டெலிவரி பார்சல்கள் சில்லரையாகவும்
மொத்தமாகவும் ஏற்றுக்கொள்ளப்படும்.

எமது கிளை ஆபீசுகள் :—

118-A, நேத்தாஜி சுபாஸ் சந்திர போஸ் ரோடு, சென்னை-1. போன் : 32303
38, தயார் சாகிப் தெரு, மவுண்ட் ரோடு, சென்னை-2. போன் : 84219
888, ஜவஹர் பஜார், கரூர். போன் : 455

Prop : M. நடராஜ பிள்ளை

ஸ்ரீ ஐயப்பஸ்வாமி பஸ் டிரான்ஸ்போர்ட்
(PRIVATE) LTD., திருச்சிராப்பள்ளி—8.

# THE SRI VENKATESA MILLS LIMITED

(SPINNING AND WEAVING MILLS)

*Regd. Office & Main Mills :*
PALANI ROAD, VENKATESA MILLS P.O.
UDAMALPET - 642 128
Telephone : 266
Telegrams : "VENKATESA"

**SPINDLES — 75060**

*Branch Mills :*
KATHIRVEDU, POZHAL P.O.
MADRAS-600 066
Telephone : 669686 & 669641
Telegrams : "VENKATESA"

**LOOMS — 330**

*Manufacturers :*

**COTTON & STAPLE FIBRE YARNS, MULL, LONGCLOTH. CASEMENT AND SHEETING.**

*General Manager :*

Sri R. MUTHUSWAMY, B.A., B.Sc., (Tech.) (Manch.), A.T.I.

*Whole-Time Directors :*

Srimathi G. RAJALAKSHMI
Sri R. VENKATASWAMY
Sri O. A. A. ANANTHAPADMANABHAN CHETTIAR

*Compliments from*

# TRADE WINGS LIMITED

193, MOUNT ROAD,

MADRAS-600002.

தந்தி : "சூட்கேஸ்" போன் : 23094




# "ஷண்முகம் பிராண்டு"

ஸ்டீல், டிரங்கு, சூட்கேஸ்கள், உறுதியான வேலைப்பாட்டுக்கும், நேர்த்தியான அமைப்புக்கும் புகழ்பெற்றது. எல்லா அளவிலும் பெட்டிகள் அழகிய பல கலர்களில் எப்பொழுதும் கிடைக்கும் . . . . . .

தயாரிப்பாளர் :

## "ஷண்முகம் பிராண்டு ஸ்டீல் டிரங்கு ஒர்க்ஸ்"

(நிர்வாகஸ்தர், C. ஞானசுந்தர நாயகர்)
(லெஸ்ஸி P. சாந்தாலட்சுஷிமி)

341, எஸ்பிளனேட் : : சென்னை-1

ஆபீஸ் & ஷோ ரூம் :—1/14. பேக்கர் தெரு, சென்னை-1.
பேக்டரி :— 25, கச்சாலீஸ்வரர் கார்டன் தெரு, சென்னை-1. போன் : 23969



Telegrams : "VASANTA" Telephone : { 25522 / 25523 }

# THE VASANTA MILLS LTD.

REGISTERED OFFICE
SINGANALLUR, COIMBATORE-5.

**Authorised Capital : Rs. 55,00.000** **Paid up Capital : 36,00,000**
SPINDLES : 48,124. LOOMS : 266

*Managing Directors :*
Mr. R. K. KANDASWAMY, B.A., B.Sc., (Tech) A.M.C.T.
Mr. K. V. RAMACHANDRAN, B.Sc., B.S., (Hons.)

SPINNING :

**Ring yarn of all counts ranging from 20s to 100s.**

**SINGLE** **CHEESES**
**DOUBLE** **CONES**
**STAPLE FIBRE** **GASSED & MERCERISED**

MANUFACTURING :

**GADA** **DHOTIES**
**MULLS** * **TOWELS** * **LONG CLOTH**

## தமிழிசை முப்பதாம் விழா—1972-73



தமிழக நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள்,
பத்மபூஷண் திரு. ம. ப. பெரியசாமித்தூரன் அவர்களுக்கு "இசைப்பேரறிஞர்"
பட்டம் வழங்கி, அதற்குரிய நற்சான்றிதழையும் வழங்கினர்.

22—12-1972

தமிழிசை முப்பதாம் விழா—1972-73



இராஜாஜி பெயரிலமைந்த கோபாலகிருஷ்ண பாரதி போட்டிக்கான பரிசினை விழாத்தலைவர் பத்மபூஷண் திரு. ம. ப. பெ. தூரன் அவர்களிடமிருந்து செல்வி என். பத்மாவதி பெற்றார்.

தமிழிசை முப்பதாம் விழா—1972-73



தமிழக நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களுக்கும்,
பத்மபூஷண் திரு. ம. ப. பெரியசாமித்தூரன் அவர்களுக்கும் மன்ற வாயிலில் இனிய வரவேற்பு.
22—12—1972

பண் ஆராய்ச்சியின் இருபத்துமூன்றும் கூட்டம்



பத்மபூஷன் திரு. ம. ப. பெரியசாமித்தூரன் அவர்கள் தலைமையுரை ஆற்றினர்.

23—12—1972

# தமிழ் இசை முப்பத்தொன்றும் விழா

**21—12—73**

**இராஜா அண்ணாமலை மன்றம், சென்னை**

உயர்நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு

## திரு. பி. ஆர். கோகுலகிருட்டிணன் அவர்களின்

## தொடக்கப் பேருரை

தமிழிசைச் சங்கத் தலைவர் அவர்களே! பலன்கருதாத் தமிழ்ப் பணி புரியும் செட்டி நாட்டரசர் அவர்களே! இவ்வாண்டில் தலைமைப் பொறுப்பினை ஏற்கும் திருமதி D. K. பட்டம்மாள் அம்மையார் அவர்களே! இசைப்பேரறிஞர்களே, தமிழ் அன்பர்களே,

முப்பத்திஓராம் ஆண்டு விழாவினைத் தொடங்கி வைக்கும் பெருமையினை எனக்களித்த தமிழிசைச் சங்கத் தலைவருக்கும் மற்றைய அங்கத்தினர்களுக்கும் என் உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### தமிழ் விதை

தமிழ் நாட்டில் தமிழ் இசை, இதற்கு ஓர் இயக்கம் என்ற அவல நிலையில் நாம் இருந்தோம். தமிழிசையில் தமிழகம் இருளடைந்த நாடு என்று எவரெவரோ சொன்னார்கள். இதையே ஒரு பெருமையாக எண்ணி நம்மில் பலர் வாளா இருந்தோம். வளமான நம் தமிழிசையை அறிந்தோம் இல்லை. அறிஞர்கள் நம்மிடையில் பஞ்சமா எனில், இருந்தார்கள்; ஆனால் அறிவு மிளிர்ந்த அளவு ஆர்வம் வளரவில்லை. அத்தகைய ஆர்வத்தினை வளர்க்கப் பாடுபட்டவர்களில் மறைமலை அடிகளையும், பரிதிமாற் கலைஞரையும், திரு. வி. கவையும், தமிழ்த் தாத்தா டாக்டர் உ. வே. சுவாமிநாத ஐயரையும் இன்னும் இதுபோன்ற சிலரையும் நம்மால் மறக்க இயலாது. இவர்களால் தூவப்பெற்ற தமிழார்வமெனும் விதையினை இசைநீர் ஊற்றித் தமிழிசை இயக்கத்தை வளர்த்த இராஜா சர் அண்ணாமலை செட்டியார் அவர்களை, இலக்கிய நீர் ஊற்றி இயற்றமிழில் யாவரும் பேசும் பழகத்தைத் தூண்டிய பேரறிஞர் அண்ணா அவர்களை, நாடகத் தமிழ் நீர் ஊற்றி நல்ல தமிழினை மேடையில் முழங்கச்செய்த ஒளவை டி. கே. சண்முகத்தை மறக்கும் தமிழர்கள் நன்றி கொன்றவர்கள் ஆவார்கள்.

தத்துவங்களின் பெருமையே, அதனைத் தரணிக்கு எடுத்துத் தருகின்றவர்களின் ஆர்வத்திலும் அறிவிலும்தான் உள்ளது. நம் பொதிகைமலைத் தமிழிலே அடங்கி உள்ள கலைகள் ஏராளம். ஆனால் ஏனோ அதனை எடுத்துரைப்பார் இல்லாமல்

போயினர். தேவாரமும், திருவாசகமும், பிரபந்தமும் பாசுரமும், பாவைப் பாட்டும், பாணர் இசையும் பல நூற்றுண்டுகளுக்கு முற்பட்டன.

### தமிழிசையின் தொன்மை

முழுதும்வெண்ணெய் அளைந்துதொட்டுண்ணும்
முகிழ் இளஞ்சிறுதாமரைக் கையும்
எழில் கொள்தாம்பு கொண்டடிப்பதற் கெள்கு
நிலையும் வெண்தயிர் தோய்ந்த செவ்வாயும்
அழுகையும் அஞ்சிநோக்கும் அந்நோக்கும்
அணிகொள் செஞ்சிறுவாய் நெளிப்பதுவும்
தொழுகையும் இவைகண்ட யசோதை
தொல்லை யின்பத்திறுதி கண்டாளே

என்ற குலசேகர ஆழ்வார் பாசுரத்தின் போது தியாகைய்யர் பிறந்தாரில்லை—

மந்திரமாவது நீறு
வானவர்மேலது நீறு
சுந்தரமாவது நீறு
துதிக்கப்படுவது நீறு
சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமைபங்கன்
திருவாலவாயான் திருநீறே!

என்ற அப்பர் காலத்தில் முத்துசாமி தீட்சதர் வாழவில்லை—

ஏறுமயிலேறி விளையாடுமுக மொன்றே
ஈசனுடு ஞானமொழி பேசுமுக மொன்றே

என்ற அருணகிரிநாதர் காலத்திற்குப் பல்லாண்டுகளுக்குப் பிறகு வந்தவர் சியாமா சாஸ்திரிகள்.

ஆனல் தமிழிசை வளர ஏன் இவ்வளவு தாமதம்? அங்கேதான் செட்டிநாட்டரசர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் பெருமை புலனாகிறது. அன்னாரின் ஆர்வம் மட்டும் நமக்குக் கிடைக்காமல் இருந்திருந்தால் ஏழிசையாய் இசைப்பயனாய் இறைவன் வாழ்ந்த தமிழ் இசையை இவ்வளவு ஏற்றத்தில் நாம் பெற்றிருக்க முடியாது.

இறைவனையே இசையாக வணங்கியவர்கள் இந்நாட்டவர்கள். ஐம்பூதங்களின் சேர்க்கை உலகம்.

அவற்றுள் ஆகாயத்திலிருந்தே ஏனைய பூதங்கள் தோன்றின. ஆகாயத்தின் குணம் இசை. இதனைப் பரிபாடல்

'கருவளர் வானத்து இசையில் தோன்ற'

எனக் குறிப்பிடுகின்றது.

### இசையின் பிறப்பும் சிறப்பும்

மலையில் வண்டு துளைத்த மூங்கில் துளை வழியே மேல்காற்று வீசியபோது ஏற்பட்ட இனிய ஒலியே மனிதன் வேய்ங்குழல் செய்வதற்கு அடிப்படையாயிற்று. பின் அது ஆம்பலந் தீங்குழல், முல்லையந் தீங்குழல், கொன்றையந் தீங்குழல் எனப் பலதிறப்பட்டதாக விரிவடைந்த செய்தி சிலப்பதிகாரத்தால் பெறப்படுகின்றது.

வண்டொலியைச் செவிமடுத்த மனிதன் அதனை ஒத்த ஒலியை எழுப்பும் யாழ்க் கருவியைக் கண்டு பிடித்தான். யாழில் பயன்படுத்தப்படும் நரம்புகளின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு யாழ்—பேரியாழ், சீறியாழ், மகரயாழ், சகோட யாழ், செங்கோட்டி யாழ் எனப் பலவகையாகப் பகுக்கப்பட்டது. யாழின் உறுப்புக்கள் பற்றியும் அவற்றில் இசை எழுப்பும் திறம் பற்றியும் சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி முதலிய நூல்கள் விரிவாகக் குறிப்பிடுகின்றன. யாழில்-பண்ணல் பரிவட்டணை, ஆராய்தல், தைவரல், செலவு, விளையாட்டு, கையூழ், குறும்போக்கு என்ற எண்வகைக் கலைத்தொழிலால் இசை எழுப்பப்பட்டது என்பதும், யாழில் பாடற்குரிய செய்கைகள் வார்தல், வடித்தல், உந்தல், உறழ்தல், உருட்டல், தெருட்டல், அள்ளல், பட்டடை என்பனவாக வரையறுக்கப்பட்டன என்பதும், யாழ் வாசிப்பதில் ஏற்படக்கூடிய குற்

றங்கள் செம்பகை, ஆர்ப்பு, அதிர்வு, கூடம் என்ற நான்கும் என்பதும் சிலப் பதிகாரத்தில் விளக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். இதுபோல் இசையின் தன்மையினைத் தொல்காப்பியச் சூத்தி ரங்கள் பல விளக்கி நிற்கின்றன.

எல்லா மொழிகளிலும் இயலும் இசை யும் நாடகமும் உண்டு. ஆனால் இவற் றோடு மொழியின் பெயரைச் சேர்த்து இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்று பகுக்கப்பட்ட பகுப்பு தமிழ் ஒன்றி லேயே காணப்படுகின்றது. இயற்றமிழில் சொற்களின் ஒலிக்கே முதலிடம். இசைத் தமிழில் சொற்களைவிட அச்சொற்களின் அடிப்படை ஒலிகளைக்கொண்டு செய்யும் எடுத்தல், படுத்தல், நலிதல் ஒலிகளுக்கே முதலிடம். நாடகத் தமிழில் இவ்விரண் டையும்விட இவற்றால் உணர்த்தப்படும் அடையாளங்களுக்கே முதலிடம். இம் மூன்று தமிழும் பண்டைக் காலத்தில் சேர்ந்தே இயங்கி வந்தன.

### முத்தமிழ்

சங்கப் பாடல்களுள் கலிப்பாக்களும் பரிபாடல்களும் இசைப்பாக்களே. சங்க காலத்தை ஒட்டி, சிகண்டியார் இயற்றிய இசை நுணுக்கம், இந்திரகாளியர் இயற் றிய இந்திரகாளியம், அறிவனார் இயற்றிய பஞ்சமரபு முதலிய பல இசைத்தமிழ் நூல்கள் இயற்றப்பட்டும் பழந்தமிழகத் தில் இசையை வளர்க்க உதவின. அவற் றுள் அறிவனார் இயற்றிய பஞ்சமரபு என்ற நூல் ஒன்றே இப்பொழுது முழுமை யாக உரையுடன் அகப்பட்டுள்ளது. அந் நூலில் பழம்தமிழ்ப் பண்கள் அவற்றின் திறங்கள் பற்றிய பல அருஞ்செய்திகளைக் காண்கிறோம்.

### வாழ்க்கையே இசை

பண்டைத் தமிழகம் வளம் கருதி நிலை கருதி மலை, காடு, பாலை, வயல், கடற்கரை என்ற ஐம்பகுப்புகளாக வகுக்கப்பட்டிருந் தன. மலை நிலத்திற்குத் தொண்டகப் பறையும் குறிஞ்சிப் பண்ணும், காட்டு நிலத்திற்கு ஏறுகோட்பறையும் சாதாரிப் பண்ணும், பாலை நிலத்திற்குத் துடி என்ற பறையும் பஞ்சுரப் பண்ணும், வயல் சார்ந்த நிலத்திற்குக் கிணைப்பறையும் மருதப்பண்ணும், கடற்கரைப் பகுதி களுக்கு மீன்கோட் பறையும் நாவாய்ப் பம்பை என்ற பறையும், செவ்வழி என்ற பண்ணும் வகுக்கப்பட்டிருந்த செய்தி நூல்களால் அறியப்படுகின்றது. குறிஞ்சி நிலப் பெண் ஒருத்தியின் பாடலிலே, கதிர்மேய வந்த களிறொன்று மெய் மறந்து உருகி நின்றது எனும் செய்தி சங்க இலக்கியத்தில் கூறப்பட்டுள்ளது. பண்டைத் தமிழகத்தில் இசையின் ஏற்றத் தைக் கடற்கரைப் பகுதியில் பாடப்பட்ட கானல்வரி, பாலை நிலத்தில் பாடப்பெற்ற வேட்டுவ வரி, பேரூர்களில் அம்மானை ஆடிக்கொண்டே பாடப்பெற்ற அம்மானை வரி, பந்தாடிக்கொண்டே பாடப்பெற்ற கந்துகவரி, உலக்கைகளால் தானியங்களை குத்திக்கொண்டே பாடப்பெற்ற வள்ளைப் பாட்டு, மலை நிலத்தில் ஆடிக்கொண்டே பாடின குன்றக்குரவை, ஆயர்கள் ஆடிக் கொண்டே பாடின ஆய்ச்சியர் குரவை நமக்கு உணர்த்துகின்றன. தமிழிலே இசை ஏது என்போர்க்கு ஏற்றமிகு தமிழ் இசையினையும் அது வளர்த்திருந்த வர லாற்றினையும் ஏராளமாக நாம் காட்ட முடியும்.

### கோழையையும் வீரனுக்கும்

இப்படித் திரும்பத் திரும்ப பேசி நாம் எடுத்துக் காட்டுவதின் நோக்கமெல் லாம் தமிழிலே இசையைப் பெருக்கி, தவறான எண்ணங்களை உடைத்தெறிந்து தனித்தமிழிலே இசைவளரும் என்பதினை நாடும் நல்லவர்களும் உணரவேண்டும் என்பதற்காகத்தான். புரியாத ஒரு மொழி

யில் பாடும்போதே புல்லரிக்க வைக்கும் இந்த இசை, தெரியாத பிறமொழியைப் பின்னே தள்ளிச் செந்தமிழில் இசைபாட முந்திவிட்டால் மகிழ்ந்து கேட்டுக் கரையாத நெஞ்சமெலாங் கரையும் என்பது உறுதி. இராமலிங்கசுவாமிகளும் பாரதியாரும் மக்களிடையே நல்ல கருத்துக்களைப் பரப்புவதற்கு தமிழிசையைத் தானே துணையாகக் கொண்டார்கள். ஏன்! இன்றைக்கு தலைமை வகிக்கும் அம்மையார் அவர்களுக்கே உரித்தான கணீர் என்ற குரலிலே பாரதியின் "ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே" பாடின நேரத்தில் கோழையையும் வீரனுக்கும் வேகம் அந்த தமிழிசையில் இருந்ததை நாம் மறக்கவில்லை. தமிழ்ப் பாடல்கள் பலவும் இப்போது கர்நாடக சங்கீதத்தில் பாடப்படுவதைக் காண்கிறோம் தமிழிசையின் பழைய நிலை பற்றிய ஆராய்ச்சிகள் நடத்தப்படுகின்றன. இன்ன இன்ன ராகம் இன்ன இன்ன தமிழ்ப்பண் என்று ஆராய்ந்து முடிவு செய்து வருகின்றனர். ஆராய்ச்சியில் இசையறிஞர் பலரும் தமிழறிஞர் பலரும் உளம்கலந்து ஒத்துழைத்தால், தமிழிசை பழஞ்சிறப்பை மீண்டும் பெறும் என்பது நிச்சயம்.

தமிழிசை மிகவும் தொன்மை வாய்ந்தது மனித இனத்தையும், பிற உயிரினத்தையும் தன்வயப்படுத்தி இசையவைப்பதால் "இசை" என்ற பெயர் பெற்றது. சிற்றின்பத்தைப் பெறுவதற்கு மட்டும் இசை பயன்படவில்லை. பேரின்பத்துக்கும் இசையைப் பயன்படுத்தினர். இறைவனையும் இசையவைக்கும் பெருமையை தமிழர்கள் இசையினில் கண்டனர்.

## ஓசையும் ஒலியும்

ஓசை ஒலியாக மாறும்போது இசை பிறக்கின்றது. "ஓசை ஒலியெலாம் ஆனாய்" என இறைவனை அப்பர் பெருமான் விளிக்கின்றார். ஆனால் இயற்கை இசையுடன் செயற்கை இசை இணையும் போது தான் நாதமும் கீதமும் நிறைவு பெறுகின்றன. "குழல்வழி நின்றது யாழே, யாழ்வழித் தண்ணுமை நின்றது தகவே. தண்ணுமையின் வழி நின்றது முழவே முழவொடு கூடிநின்று இசைத்தது ஆமந்திரிகை" யென, நாட்டியத்துடனும் இசையுடனும் இணைந்து நின்ற செயற்கைக் கருவிகளை அழகுறச் சிலப்பதிகாரம் கூறுகிறது. இந்த ஆமந்திரிகையை "ஆர்ச்செஸ்ட்ரா" என்று விபுலாநந்த அடிகள் குறிப்பிடுகின்றார். இப்படிப் பலவாத்தியங்கள் சேர்த்திசைப்பதைக் கம்பநாட்டாழ்வார் 'பல்லியம்' எனக் கூறி, இத்தகைய பல் இசை முழக்கத்தை "வங்கியம் பல தேன் விளம்பின, வாண்முழந்தின பாணியின் சங்கியம்பின, கொம்பலம்பின, சாமகீதம் நிறம்பவே" எனக் கூறியுள்ளார். இத்தகைய பெருமைக்கு இருப்பிடமாய் இருந்தது, இருப்பது தமிழ் இசை.

மறை ஓதி மூடப்பட்ட கதவினை தமிழ் இசை ஓதித் திறந்தோம் என ஏட்டிலே படித்தோமே யன்றி, நாட்டிலே தமிழ் இசையினை மறந்தோம். மறந்ததோடன்றி, தமிழிலே இசை உளதோ எனக் கேட்கும் அளவிற்கு இசையினிலே தமிழை மறந்தோம், அதனால் இசைபட வாழ்ந்த தமிழினம் இடைக்காலத்தில் தனித்தன்மை இழந்து நின்றது.

## புரட்சிக் கவிஞர் கொதிப்பு

நம்மிடையே தமிழிசை இருந்தும் இல்லாதவர்களாய் தமிழிலே ஏது இசை யென விளம்பினோரைச் சாடும் வகையில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்,

"செந்தமிழில் இசைப் பாடல்
இல்லையென செப்புகின்றீர்
மானமின்றிப்

பைந்தமிழில் இசையின்றேல்
பாழ்ங்கிணற்றில் வீழ்ந்துயிரை
மாய்த்தலன்றி

எந்தமிழில் இசையில்லை
எந்தாய்க்கே உடையில்லை
என்பதுண்டோ?

உந் தமிழை அறிவீரோ
தமிழறிவும் உள்ளதுவோ
உங்கட் கெல்லாம்?

வெளியினிலே சொல்வதெனில்
உம் நிலைமை வெட்கக்கே
டன்றோ? நீவிர்

கிளிபோலச் சொல்வதன்றித்
தமிழ் நூற்கள் ஆராய்ந்து
கிழித்திட் டீரோ—"என்று,

பாடிய பாட்டின் பெருமை நமக்கு நன்கு விளங்குகின்றது. சொல்லும் பொருளும் இசைந்தோடும் உயிரோட்டத்தில்தான் இசை வாழ்கிறது. பொருளுணர்ந்து பாடும்போதுதான் உள்ளக் கிளர்ச்சியும் உணர்வு வளர்ச்சியும் உண்டாகிறது. செவ்விய பொருளும் இசையும் இணைந்த வினையே கவிதை. இதே கருத்தினை அப்பர் "சொற்பாவும் பொருளுணர்ந்து தூய்மை நோக்கி தூங்காதார் மனத் திருளை வாங்காதானை" என்கின்றார். அத்தகைய இசையைத்தான் தமிழிசை இயக்கம் வலியுறுத்திற்று; வெற்றி கண்டு வருகின்றது.

## பேரறிஞர் அண்ணா கூறினார்

பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதைப்போல சேரன் கொலுமண்டபத்திலே கொண்டாட்டங்களின்போது இசைவாணர்கள் 'வாதாபிகண' பாடவில்லை, பாண்டியன் பரிபாலனத்தின் போது 'பலுகவே ஏமீரா' பாடவில்லை மூவரசர்கள் வாழ்ந்த நாட்களிலும் அதற்கு முன்பும் தியாகய்யர், சாஸ்திரி, தீக்ஷிதர் கிருதிகள் பாடவில்லை. இசையே இல்லையோ? உண்டு, தமிழ் இசை பாடப்பட்டது. அந்த இசை இன்று எங்கே? சேரநன்னாட்டிளம் மங்கையர், வேழத்தை விரட்டிய காதலரை வாழ்த்திப் பாடியது தமிழில்தான்! வெற்றிக்கொடி பறக்க எதிரியை விரட்டி அடித்துத் திரும்பிய சோழ மன்னர்கள் சிறப்பை, தமிழில் தான் பாடினார்கள். கடலோரத்தில் பட்டுக் கூடாரத்தினுள்ளே பக்கத்திலிருந்த கோவலனின் உள்ளம் குழைய பாடியது 'மாருபல்கா', 'கொன்னாவே ஏமிரா'வும் அல்ல; தமிழ்.

## அண்ணாமலை அரசர்க்கு நன்றி

இப்படி நான் சொல்லும்போது "எந்தரோ மகானுபாவரு அந்தருக்கு வந்தனமு" என உளமுருகி அன்பின் திருவுருவம் ஆர்வத்தின் பேருருவி, அடக்கத்தின் பெட்டகம் இறைவன் ஆசிபெற்ற எங்கள்வட்ட தியாகையரையும் அவர் தம் தேனருவியாம் இசையமுதையும் குறைக்கின்றேன் என தயவுசெய்து யாரும் கருதிவிடவேண்டாம். அதே நேரத்தில் வேதனையை மறக்க, விவேகத்தைப் பெருக்க போதனையில் சிந்தனையை வளர்க்க, சிவசக்தி சாதனையில் அருள் வெளி அடைய நாவுக்கரசர் தேவாரத்தினை வேதநெறி தழைத்தோங்க, மிகு சைவத்துறை விளங்க நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞான சம்பந்தர் பாக்களை இறைவனை ஏழிசையாய் இசைப் பயனாய் தன்னுடைய தோழனுமாய் உருவகப்படுத்திப் பாடி அருளிய சுந்தரர் துதிப் பாடல்களை, "திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என ஏற்றம் பெற்ற மாணிக்கவாசகப் பெருமானின் இசையினை ஏன் மறந்தோம் என்பதுதான் கேள்வி. இவ்வளவு இசைக் கருவூலங்கள் ஆச்சரியக்குறியாக இருந்து, ஏன் நடைமுறையில் இல்லை என கேள்விக் குறியாகி, செட்டிநாட்டரசர் காலத்தில்

தான் விடையளிக்கப்பட்டது என்பதில் நாம் அனைவரும் அக்குடும்பத்தினரை வாழ்த்தாமல் இருக்க முடியாது. பலன் கருதி செய்பவர் பலர். ஆனால் செட்டி நாட்டரசர் நம் தமிழ்ப் பழமை கருதிச் செய்தார். தமிழால் வளர்ந்த சிலரில் ஒருவர்தான் மேன்மை தங்கிய அண்ணா மலைச் செட்டியார் அவர்களும் ராஜா சர். முத்தையா செட்டியார் அவர்களும் அவர்கள் வழி வந்தவர்களும். தமிழிசை வளரவேண்டும் தமிழ் வளரவேண்டும் என்பதிலே ஆர்வம் இருக்கின்ற அள விற்கு தமிழ் அறிவு வளரவேண்டும். ஆர்வமற்ற தமிழறிவு தமிழை வளர்க் காது. அதேநேரத்தில் தமிழறிவு நிரம்பப் பெறாத ஆர்வம் தமிழின் உயர்வை எய்தாது. இசைக் கலையினிலே, இன்ன பிற கலைகளிலே ஏற்றமுற வாழ்ந்த வர்கள் தமிழர்கள். இன்றல்ல, பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இந்திய இசையில் தேவாரப் பாடல்களே ஆதி உருப்படிகளாகும்.

## கிராமியக் கலை

நம்முடைய தமிழ் இசையின் பழமை இன்றைக்கும் கிராமியக் கலைகளால் பாதுகாத்து வரபபடுகின்றது. ஆனால் அக்கலையினைப் பாதுகாப்பதில் நமது ஆர்வம் குறைவாக இருப்பது வருந்தற் பாலது. கிராமங்களில் வாழும் கோடானு கோடி ஏழை எளிய மக்களுக்கும் கலை உணர்ச்சி உண்டு; அழகு உணர்ச்சி உண்டு. இன்னும் சொல்லப்போனால் நாக ரீகம் அடைந்தவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களுக்கு இருக்கும் கலை உணர்ச்சியைவிட, தெய்வத்தையே நம்பி, பூமிதேவியின் உண்மைப் புதல்வர்களாய் வாழும் அந்த கிராமவாசியின் கலை உணர்ச்சி தூய்மை வாய்ந்தது. அப்படி அவர்கள் வளர்த்துள்ள கலைகள் அவர்கள் மனத்திற்கும் கேட்போர் உள்ளத்திற்கும் அமைதி வரம் கொடுக்கும். மக்கள் கலைகள் (Folk arts) இத்தகைய பழமை யின் அடித்தளத்தை வைத்துக்கொண்டு தான் புதுமையை வளர்க்கப் பாடுபட வேண்டுமே ஒழிய பழமை என்று ஒதுக்கி விட்டால் நம் கலைகள் நம் பண்பாட்டில் வளரா. ஏழு ஸ்வரங்கள் பழையன என்று எழுபது ஸ்வரங்களை மனிதன் ஏற்றுக் கொள்வதில்லை. இத்தகைய கிராமத்தின் சூழ்நிலையில் உருவாகி உணர்வோடு உலவுகின்ற இசையைத்தான் பாரதி யாரும்,

> ஏற்ற நீர்ப்பாட்டின்
> இசையினிலும் நெல்லடிக்கும்
> சோற்றுடியார் குக்குவென
> கொஞ்சும் ஒலியினிலும்
> சுண்ண மிடிப்பார் தம்
> சுவைமிகுந்த பண்களிலும்
> பண்ணை மடவார்
> பழகுவல பாட்டினிலும்
> வட்டமிட்டுப் பெண்கள்
> வளைக்கரங்கள் தாமொலிக்க
> கொட்டி இசைத்திடுமோர்
> கூட்டமுதப் பாட்டினிலும்
> வேயின் குழலோடு
> வீணை முதலா மனிதர்
> வாயினிலும் கையாலும்
> வாசிக்கும் பல்கருவி
> நாட்டினிலும் நெஞ்சைப்
> பறிகொடுத்தேன்.

எனப் படம் பிடித்துக் காட்டுகின்றார். அத்தகைய கிராமியக் கலைகளை ஆதரித்து வளர்க்கவேண்டிய பொறுப்பு நம்மிடம் உள்ளது என்பதனை தமிழ் இசையினிலே ஆர்வங்கொண்ட ஒவ்வொருவரும் உணருதல் அவசியம்.

## வாழ்க்கையின் உயிர்ச் சத்து

இந்திய நாட்டின் வாழ்க்கை, குறிப்பா கத் தமிழகத்தின் வாழ்க்கை இசையோடு கூடிய வாழ்க்கை. இசையைப் பொழுது போக்காக அல்ல வாழ்க்கையோடு ஒன்றி

விட்ட உயிர்ச் சத்து, இறையின் தத்துவத்தைக் காட்டிடும் கலை என்று கொண்டவர்கள் தமிழர்கள். இந்த அடிப்படையில் தான் அருணகிரிநாதர்,

> நாத விந்துக லாதீ நமோ நம
> வேத மந்த்ர சொரூபா நமோ நம
> ஞான பண்டித சாமீ நமோ நம—
> வெகு கோடி.

என்று மனமுருகப் பாடினர்.

## உலகமெல்லாம் பரவுக !

நல்லதொரு தமிழ் உணர்ச்சியும் தமிழறிவும் வளர்ந்து வரும் நிலையினை நாட்டில் இன்று காணுகிறோம். இதனைக் கண்டு வெறுப்புறுவோர், வேதனையுறுவோர், நையாண்டி செய்வோர் இவர்களைப் பற்றி நாம் கவலையுற வேண்டுவதில்லை. கிண்டலுக்கும் கேலிக்கும் துவளாது தமிழ்ப்பாட்டின் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட, மக்களுக்கு துன்பம் நேர்கையில் பைந்தமிழ் யாழெடுத்து இன்பம் சேர்த்திட, தேமதுரத் தமிழோசையை உலகமெலாம் பரவும் வகை செய்திடப் புறப்படுவோம். தமிழே நீ ஓர் பூக்காடு, நான் ஓர் தும்பி எனத் தமிழ்த்தேனைப் பல்துறைகளிலும் நுகரும் மனத்தினை இத் தமிழிசை இயக்கம் நமது மக்களுக்குத் தருவதாக எனக் கூறித் தமிழிசைச்சங்க முப்பத்தி ஓராம் ஆண்டு விழாவினை பெருமையுடன் துவக்கி வைக்கின்றேன். வணக்கம்.


வாழ்க தமிழிசை !

வளர்க தமிழிசைத் தொண்டு !!

**கீதா பிரஸ்**

திருச்சிராப்பள்ளி-2

போன் :
ஆபீஸ் : 4029 & 4629
வீடு : 6129

தந்தி :
" பேப்பர் ஹவுஸ் "



**தேவர் ஏஜன்ஸீஸ்,** (பேப்பர் வியாபாரிகள்)
மலைவாசல் - - திருச்சி-2

தந்தி : "சாந்தா". திருச்சி

போன் : 4161



வி. பி. என்.

ஒரிஜினல்
சாந்தா வைரங்கள்
(ரிஜிஸ்டர்டு)

★

ராயல்
ஸ்டார் வைரங்கள்
(ரிஜிஸ்டர்டு)

PROPRIETORS :

# M/s. V. P. நரசிம்மலு நாயுடு

ஷராப் வியாபாரம்

"V. P. N. மாளிகை"

பெரியகடை வீதி, (த.பெ.நெ. 525) திருச்சிராப்பள்ளி - 8

வி. பி. பி. ஆர்டர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.



இசைப்பேரறிஞர் திரு. P. S. வீருசாமி பிள்ளை அவர்கள்
மறைவு 20—4—73



இசைப்பேரறிஞர்
திரு. எம். எம். தண்டபாணி தேசிகர் அவர்கள்
மறைவு 29—6—73



இசைப்பேரறிஞர் திரு. பாபநாசம் சிவன் அவர்கள்
மறைவு 1—10—73



இசைப்பேரறிஞர், பேராசிரியர்
திரு. P. சாம்பமூர்த்தி அவர்கள்
மறைவு 23—10—73

*With best compliments*

*from*

# SOUTH INDIA CORPORATION (Agencies) PRIVATE LIMITED

***DEALERS IN:***

- ¤ LINOLEUM Floor-Coverings
- ¤ UE House Service Meters
- ¤ FINOLEX House Wiring
- ¤ TOSHIBA-ANAND Lamps
- ¤ TOSHIBA-ANAND Ballast Fittings
- ¤ TOSHIBA-ANAND Dry Cell Batteries
- ¤ HOPES Metal Windows, Doors & Ventilators
- ¤ BINNY-SATAKE Modern Rice Mills
- ¤ COLORCEM Paints
- ¤ LION BRAND Cement Colours
- ¤ VEMBANAD BRAND White Cement
- ¤ PVC Rigid Pipes and Conduits
- ¤ DM Flexible Conduits

*Regd. Office*: "ADAYAR HOUSE", MADRAS-600085

★

**"SOUTH INDIA HOUSE"**

**Post Box No. 113**

**99, ARMENIAN STREET**

**MADRAS-600001**

Telegrams: "GOODWILL" Telex: 310 Telephone: 29341 (10 Lines)

***Anything to do with Hire Purchase***
***has everthing to do with M.C.C.***
***for***

**ALL YOUR MOVING COMFORTS IN LIFE**

❊

**Remember**

# MERCANTILE CREDIT CORPORATION LTD.

*Regd. Office :* 99, ARMENIAN STREET, MADRAS-600 001.

Phone: 22081

❊

***BRANCHES:***

24, WHITE ROAD, MADRAS-600 014
Phone: 811769

6/50, RACE COURSE ROAD, COIMBATORE-641 018
Phone: 34685

3, PROMANADE ROAD, TIRUCHIRAPALLI-620 001
Phone: 7233

108/109, COMMERCIAL STREET, BANGALORE-560 001
Phone: 53541

இசைப் பேரறிஞர்

# திரு. எம். எம். தண்டபாணி தேசிகர்

**அண்ணுமலைப் பல்கலைக் கழக இணைவேந்தர், செட்டிநாட்டரசர், டாக்டர் ராஜா சர். முத்தையா செட்டியார் இசை அரசு, இசைப் பேரறிஞர் தண்டபாணி தேசிகர் அவர்கள் மறைவு குறித்துச் சொல்லியதாவது :**

"இசையரசு, இசைப் பேரறிஞர் என்னும் பட்டங்களைப் பெற்ற திரு. இசையரசு தண்டபாணி தேசிகர் அவர்களின் அகால மரணம் குறித்து மிகவும் வருந்துகிறேன். தமிழ் உலகம் சிறந்ததொரு இசை மேதையை இழந்துவிட்டது. திரு. தண்டபாணி தேசிகர் அவர்களுக்கு இசையரசு பட்டத்தைச் சென்னை, கோகலே மன்றத்தில் 1939-ம் வருடத்தில் நான் வழங்கினேன். நந்தனுர், பட்டினத்தார் முதலிய பக்திப் படங்களில் நடித்துப் பேரரசு பட்டம் பெற்றவர். திரு. தேசிகர் அவர்கள் பாடிய பாடல்கள் இணையற்ற புகழையும் பாராட்டுதலையும் தேடித்தந்தன. தமிழ் இசை இயக்கத்தை சென்னையில் தொடங்க அரும்பாடு பட்டவர்களில் தேசிகரும் ஒரு முக்கியமானவர். சென்னைத் தமிழிசைச் சங்கத்தால் தமிழிசை வல்லுநர்களுக்கு வழங்கப்பெறும் இசைப்பேரறிஞர் பட்டத்தை முதன்முதலில் நம் தேசிகர் அவர்கள் பெற்ருர்கள். அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் சுமார் 16ஆண்டுகள் இசைத்துறைத் தலைவராகச் சிறப்புடன் பணியாற்றி வந்தார்கள். பண்பும் அன்பும் மிகுந்தவர்."

### இசையரசு இரங்கற்பா

(பெ. தூரன்)

தேசிகரே மறைந்தனையோ
திருப்பாட்டும் மங்கியதோ

காசினியில் போதுமுன்றன்
கன்னல்தேன் தேவாரம்

ஆசையுடன் கேட்க இங்கே
அழைத்திட்டோம் என்றங்கே

பாசமுடன் தேவரெலாம்
பரிந்தழைத்துக் கொண்டாரோ

வீசுபுகழ் மூவருமே
மெய்ம்மறந்து கேட்டனரோ

மாசில்லா உன்குரலும்
வானுட்டில் ஒலித்ததுவோ !

தமிழிசையின் உயர் தூணுய்த்
தரணியிலே வாழ்ந்திருந்தாய்
அமுதமெனத் தமிழ்ப்பாடல்
அள்ளியெங்கும் பொழிந்திட்டாய்
நமனும் உம்மிசையை
நயந்திங்கு கேட்டிருந்தால்
உமதுயிரைக் கொண்டுசெல
ஒன்றுதென் றுணர்ந்தேதான்
எமையெல்லாம் துயரத்தில்
ஏங்கிடவே செய்துவிட்டு
இமைப்பொழுதில் கொண்டுசெல
எண்ணியிங்கு வந்தானே!

உயிர்கொண்டு செல்லுமுன்பு
உளம்பதறி நின்ருனே
மயங்கிடுவார் பட்டினத்தார்
மாதாவைப் பிரிந்ததுபோல்
அயர்ந்திடுவார் திருநாளைக்
கங்குசெல விழைந்ததன்
அய்யயே மெத்த இது
கடினமெனும் அத்துவித
உயர்பாட்டும் உனைப் பிரிந்து
உயிர்த்திங்கு நின்றிடுமால்
தயவுடனே குறவஞ்சி
தூதனுப்பத் தயங்கிடுவாள்!

இசைத் தமிழின் சேவையினுல்
இசையரசும் மறையாது
வசையில்லாத் தமிழ்ப்பாட்டும்
வாயடங்கி நில்லாது
திசைமுட்டும் தெய்வ மணத்
தேவாரப் பாட்டெல்லாம்
கசிந்துருகி இசையரசு
கண்டவழி ஓங்கிடுமால்
இசையரசும் நிலைத்திருக்கும்
முக்காலும் இதைமொழிவேன்
தசையுடம்பு தான் மறைந்தால்
புகழுடம்பும் மறைந்திடுமோ ?

# பட்டம் பெறும் பட்டம்மாள்

காஞ்சிபுரத்தை அடுத்த தாமல் என்னும் சிற்றூர் சங்கீதத்தை வளர்க்கும் ஒரு கலைக்கூடமாக ஏறக்குறைய அரை நூற்றாண்டுக்குமேல் புகழ் பெற்றுள்ளது. தாமல் கிருஷ்ணஸ்வாமி அய்யர் சிறந்த ஸங்கீத ரஸிகர்; தாமல் கிருஷ்ணஸ்வாமி அய்யர் தம் அருமை மகள் பட்டம் மாளுக்குச் சேகரித்த சீதன வரிசை: ஸங்கீதம். தாமலில் ஸங்கீத உபாஸனை செய்து வந்த மற்றொரு ரஸிக சிகாமணி தாமல் வரதாச்சாரியார். கிருஷ்ணஸ்வாமி அய்யரும், வரத குட்டியும் காஞ்சிபுரம் லயப்பிரம்மம் நாயனாப்பிள்ளையின் ஸங்கீதத்தில் ஊறி வளர்ந்தவர்கள். நாயனாப்பிள்ளையின் பல்லவி வின்யாஸத்திலும் லய வின்யாஸத்திலும் தம் இருவர் ஆவியையும் கொள்ளை கொடுத்த ரஸிகர்கள். ஆனால் ஏறக்குறைய நடவிட காயகர்கள் தீண்டாதவர்களாகப் புறக்கணிக்கப்பட்டவர்கள்; ஆகவே பாட்டும் கூத்தும் ரஸிப்பவர்களும் தீண்டப்படாதவர்களாக ஒதுக்கப்பட்டது ஆச்சரியமில்லை.

தாமல் கிருஷ்ணஸ்வாமி அய்யர் ஸங்கீதப் பைத்தியமாகச் சீர்குலைந்தது மன்றி தன் அருமை மகளுக்கும் ஸங்கீத விஷத்தை ஊட்டி வளர்க்கத் துணிந்தார். அஞ்சாத பக்தியுடனும் பணிவுடனும் திருவண்ணாமலை முனிவர்முன் பட்டம்மாளைப் பாடச் செய்தார். குழந்தை பட்டம்மாளின் இனிய குரலிலும் ஸங்கீதத்திலும் மெய்மறந்து வேறொன்றும் கூறாமல் ஒரு துளித் தேனை குழந்தையின் நாவில் தடவி ஆசி கூறினார். முனிவரின் ஆசிக்கும் காப்புக்கும் எதிராகப் பட்டம்மாளின் குடும்பத்து பெரியவர்களின் எதிர்ப்பு ஓங்கக்கூடவில்லை; அவர்களது வாக்கைப் பொய்ப்பிக்கும் வகையில் ஈசுவரனுடைய கடாக்ஷம் பட்டம்மாளுக்குக் கிடைத்தது. காஞ்சிபுரத்தில் பிரபல தேசியவாதியாகவும் வைத்தியராகவும் புகழ் பெற்ற **Dr.** சீனிவாச அய்யரின் மருமகன் **R.** ஈசுவரன், **D. K.** பட்டம்மாளையும், ஸங்கீதத்தையும் மணந்து கொண்டார்.

காஞ்சிபுரம் நாயனாபிள்ளையின் மந்திரத்தையே ஜபித்துக் கொண்டிருந்த கிருஷ்ணஸ்வாமி அய்யர், தனது மகளுக்கு நாயனாப்பிள்ளையை ஸங்கீத குருவாக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டிருந்தார். இந்தத் திட்டத்துக்கு முதல்படியாக நாயனாப்பிள்ளையின் மாணவர் **N. S.** கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் சிறிது காலம் பட்டம்மாளுக்கு ஸங்கீதம் சொல்லி வந்தார். இந்த விவரம் நாயனாப்பிள்ளைக்குத் தெரியாது. நவராத்திரி விழாவின்போது நாயனாப்பிள்ளையின் வீட்டில் தினமும் கச்சேரிகள் நடப்பது வழக்கம். விழாவில் ஒரு தினம் பாடும்படி பட்டம்மாளுக்கு பிள்ளை அழைப்பு விடுத்தார். "கஞ்சி வரதப்பா" என்ற குரலைக் கேட்டவுடன் பட்டம்மாளும் அவருடைய தகப்பனாரும் சென்று கச்சேரி நடத்தினார்கள். "புத்திராது" கீர்த்தனமும் 'பரமாத்முடு' கீர்த்தனமும் பட்டம்மாளின் கச்சேரியில் சிறப்பு அம்ஸங்கள். நாயனாப்பிள்ளையின் பாடத்தின் எதிரொலியாக அமைந்ததைக்

கேட்டு மிகவும் ஸந்தோஷப்பட்டார். அதே மூச்சில் கிருஷ்ணஸ்வாமி அய்யர் மேற்படியில் தாவினர்; நாயனுப் பிள்ளையின் தாயாரும், காஞ்சிபுரம் தன கோடி அம்மாளின் இளைய ஸகோதரியு மான காமாக்ஷி அம்மாளிடம் ஸங்கீத சிக்ஷைக்குப் பட்டம்மாளை ஒப்படைத்தார். ஆனல் ஆண்டவன் கட்டளை வேறு வித மாக முடிந்தது. குரு குலத்தில் கடுமை யான வைசூரி பிடிக்கவே மீண்டும் பட்டம் மாள் சிக்ஷையைத் தொடரமுடியாமல் தடைப்பட்டு விட்டது. ஆனல் அந்த பீடத்தில் கற்ற ஒரே பாடம் சியாமா சாஸ்திரிகளின் மாஞ்சி ராகக் கீர்த்தனை- 'ப்ரோவ வம்ம தாமஸமேலே' ஆணி வேராகப் பாய்ந்து விட்டது!

கைக்கெட்டினது வாய்க்கு எட்டவில்லை. நாயனுப்பிள்ளையிடம் தொடர்ந்து சிக்ஷை சொல்லிக் கொள்ள முடியாமற் போனதி லிருந்து மேல் படிப்பில் பட்டம்மாளுக்கு தீவிரம் அதிகமாகி விட்டது. அவருக்கு பிரபல ஸாகித்ய கர்த்தாவான வித்யால நாராயணஸ்வாமி நாயுடுவின் மருமகன் வித்யால நரசிம்மலு நாயுடுவின் தொடர்பு கிடைத்தது. திருப்புகழ்ப் பாடல்களை ஏராளமாகப் பாடஞ்செய்ய வேலூர் அப்பாத்துரை ஆச்சாரியார் உதவினர். முத்துஸ்வாமி தீக்ஷிதருடைய அபூர்வ கீர்த்தனைகளை உயர்நீதி செய்தார். வீணை தனம்மாள் மூத்தமகள் ராஜலக்ஷ்மி அம் மாளிடம் பதங்கள் சிலவற்றைக் கற்றுக் கொண்டார். பட்டம்மாளுக்கு இளமையில் ஸங்கீத அஸ்திவாரம் ஆணித்தரமாக வேரூன்றியவர் இசைப் பேரறிஞர் அரியக்குடி ராமானுஜ அய்யங்காரின் மாணவர் **V. C.** வைத்தியநாதன் அவர்கள் ஆவார்.

பட்டம்மாளின் சொல்திறம் பளிங்கு போன்றது. ஆகவே கச்சேரி மேடை களிலும் திரைப்படப் பின்னணியிலும் அவர் பாடிவந்த மஹாகவி சுபபிரமணிய பாரதியாரின் தேசியப் பாடல்கள் சிறந்த வரவேற்புப் பெற்றன. நாயனுப்பிள்ளை யின் சீடர் கிருஷ்ணஸ்வாமி அய்யங்காரும் அவ்வப்போது கை கொடுத்து வந்ததால் பல்லவிகளைப் பாடஞ் செய்தது மல்லாமல் "நெஞ்சே நினை அன்பே துதி" எனும் பல்லவியை இசைத் தட்டுகளில் பதிவு செய்தார். பல்லவிப் பகுதி கர்னடக ஸங்கீதத்தின் கற்பனைச் சிகரம் எனக் கருதுவார்கள். அந்தப் பகுதியில் பட்டம் மாள் வல்லமை பெற்ருர் என்பதற்கு அறி குறியாக லய நிபுணர் பாலக்காடு-இசைப் பேரறிஞர் மணி அய்யர் பக்கவாத்தியம் வாசிக்க வந்துள்ளார். பெண்களின் ஸங்கீதத்தில் இந்த வெற்றி சிறந்த அம்சம்; ஆனல் தனது சாதனை கைம் மண் அளவு என்று பட்டம்மாள் கருதுகிருர்.

பட்டம்மாளுக்கு தந்தை உதவிய ஸங்கீத சீர், பட்டம்மாளுடைய குடும்பம் முழுவதுமே தொத்திக்கொண்டுவிட்டது. தனி ஸங்கீத பரம்பரைக்கே பட்டம்மாள் தலைவி பதவி ஏற்றுக்கொள்ளும் பெருமை கிட்டியுள்ளது. தனது இளைய ஸகோ தரர்கள் **D. K.** நாகராஜனும், **D. K.** ஜய ராமனும் நல்ல ஸங்கீதப் பயிற்சி பெற் ருர்கள். இன்னும் ஜயராமனும் பட்டம் மாளும் சேர்ந்து பாடி கச்சேரிகளுக்கு தனி மெருகு ஏற்றி வருகிருர்கள். பட்டம் மாளுக்கு கிடைத்த அரசியல் பட்டங் களுள் முதன்மையாக ஜனதிபதி விருது 1962-ல் சூட்டப்பட்டது. அதற்கு முன்னரே 1944-ல் மஹா வித்வானும், ரஸிக சிகாமணியுமான, ஸங்கீத ஜனதிபதி, டைகர் வரதாச்சாரியார் பட்டம்மாளுக்கு "கான சரஸ்வதி" என்னும் பட்டத்தைச் சூட்டினர், 1970-ல் சென்னை வித்வத் சபையின் "ஸங்கீத கலாநிதி" பட்டமும் சூட்டிக்கொண்டார். ஆனல் அவருடைய இளைய சகோதரன்

D. K. ஜயராமன் தமது 10-வது வயதி லேயே பட்டாபிஷேகம் பெற்றுவிட்டார். அகில உலக ஜோதி நாதஸ்வர சக்ர வர்த்தி திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளை ஜயராமனது பாட்டைமெச்சி "இசைத் தம்பி" பட்டத்தைச் சூட்டி விட்டார்! பட்டம்மாளின் மூத்த மகன் சிவகுமார் கல்லூரிப் படிப்புடன் மிரு தங்கக் கலையையும் கற்று பட்டம்மாளின் கச்சேரியிலும் மற்ற கச்சேரிகளிலும் மிருதங்கம் வாசித்து வருகிறார். சிவ குமாரின் மனைவியும் மிருதங்கம் மணி அய்யரின் மகளுமான லலிதாவும் உடன் சேர்ந்து பட்டம்மாளுடன் பாடிவருகிறார்!

பட்டம்மாள் பணிவும், நன்றியும் கலந்த குரலில் ஒரு உண்மையை மீண்டும், மீண்டும் சொல்லிக் கொள்ளத் தவறு வதில்லை. இசைப்பேரறிஞர் பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி அவர்கள் பல ஆண்டுகள் நடத்தி வந்த கோடை இசைக் கல்லூரி யின் சிறப்பு மாணவி பட்டம்மாள். பட்டம்மாளை இசை உலகிற்கு அறிமுகம் செய்வித்த உரிமையும், பெருமையும் சாம்பமூர்த்திக்கே உரித்தாகும். மறக்க முடியாத முன்னேற்றப்படிகளில் இது முதன்மையானது. இதை மீண்டும் மீண்டும் நினைவு படுத்திக் கொள்வார்.

மற்றொரு நிகழ்ச்சியை இதேபோல் தனி விருதாகக் கருதி வருகிறார். பட்டம்மாள் சங்கீத வானில் தனி விருதாகக் கருதி வருகிறார். பட்டம்மாள் சங்கீத வானில் தலை எடுத்த சில நாட்களுக்கெல்லாம் திருச்சி வானொலியில் தியாகராஜரின் ராமாயணம் நாடகமாக ஒலிபரப்ப திட்ட மாயிற்று. K. V. இராமச்சந்திரன் எனும் பெரும் ரஸிகர் அதைத் தொகுத்துத் தயாரித்தார். சைதாப்பேட்டை மூர்த்தி ராவ் பாகவதரும் பட்டம்மாளும் அந்த நாடகத்தில் முக்கிய குரல்கள். பல அபூர்வ கீர்த்தனைகளைப் பாடவேண்டியிருந்தது. ¾ மணிக்குத் திட்டமிட்ட நாடகம் 2 மணிக்கு கூடுதலாக நீண்டுவிட்டது. கீர்த்தனங்களின் எண்ணிக்கையும் பெருகிவிட்டது. அவைகளைப் பாடஞ் செய்து பாடவோ ஒத்திகை செய்யவோ போதுமான அவகாசம் இல்லை. நிர்வாகி களும், 'நடிகர்களும்' திணறித் திகைத்து விட்டார்கள். அப்போது வீணை தனம் மாளின் இரண்டாவது பெண் லக்ஷ்மி ரத்தினம்மாள் மரண வேதனையில் படுத் திருந்தாலும் வானொலி நிகழ்ச்சியில் எல்லாக் கீர்த்தனைகளையும் பாட வாய்ப்புக் கேட்டார்கள். தனக்குக் கைகொடுத்து உதவிய லக்ஷ்மி ரத்தினம்மாளையும் அவ ருடன் சேர்ந்து பாடின பெருமையையும் தனி விருதாகக் கருதி வருகிறார்கள்.

இசைப் பேரறிஞர் பாபநாசம் சிவ னிடம் நேர்முகமாகப் பல பாடல்களைக் கற்றதனால் அவைகளை மட்டுமே தொடர்ந்து பாடிவருவதையும் ஓர் சிறப்பு நினைவுச் சின்னமாகக் கொண்டுள் ளார்கள்.

Telegrams : "KWALITY" Telex : "KWALITY CB-297" Telephones : 201, 202 & 566

# KWALITY SPINNING MILLS PRIVATE LTD.

Post Box No. 27

UDAMALPET ROAD, POLLACHI-642 003

| | | |
|---|---|---|
| RING SPINDLES | — | 25032 |
| DOUBLING SPINDLES | — | 2856 |
| CONE SPINDLES | — | 464 |

*Manufacturers of :*

BEST CARDED AND COMBED COTTON YARN OUTSTANDING FOR QUALITY

**O. M. SP. L. M. MEYYAPPA CHETTIAR**
*Managing Director*

**M. MEYYAPPAN,** B.Sc., B.Sc., (Tech.)
*Secretary*



பண் ஆராய்ச்சியின் இருபத்தி நான்காம் கூட்டத்தைத்
தொடங்கிவைக்கும்

22—12—1973

உயர்நீதிமன்ற நீதிபதி
திரு. என். கிருட்டிணசாமி ரெட்டியார் அவர்கள்

சுடர்மிக்க வைரம், நவநாகரீகமான தங்க நகைகள் பரிசுப்
பொருள்களுக்கு கோவையில் சிறந்த ஸ்தாபனம்

KR
& SONS
Jewellery

தொலைபேசி : 23033

தந்தி : "KAYARSONS"



GENUINE GEMS
Exquisite Ornaments.

BIG BAZZAR ST
COIMBATORE. I.

நாதசுர மேதைகள்

# கீரனூர் சகோதரர்கள்



தஞ்சை B. M. சுந்தரம்

. நாகஸ்வர இசையுலகில் மகோன்னத ஸ்தானம்வகித்து, அக்கலைக்குப் பெருமை தேடித்தந்த விற்பன்னர்களில் 'கீரனூர் சகோதரர்கள்' குறிப்பிடத்தக்கோராவர். சுமார் 30 ஆண்டுகட்கு முன்பு இந்தச் சகோதரர்களின் இசைவெள்ளத்தில் மூழ்கிய சகோதரக் கலைஞர்களும், ரஸிகர்களும் இவர்கட்குத் தனி மதிப்புக் கொடுத்தனர். இவர்களால் நாகஸ்வரக் கலையின் மதிப்பும் உயர்ந்தது. 'கீரனூர் சகோதரர்கள்' என்றழைக்கப்பட்ட இவ்விருவரும் உடன் பிறந்தோர் அல்லவெனினும், இசைத்திறத்திலும், நயத்திலும் உடன் பிறந்தோராகவே, ஏன், ஒருவராகவே விளங்கினர்.

நாகஸ்வர இசைப் பாரம்பரியம் மேம்பட்ட தஞ்சாவூர் மாவட்டத்தில் நன்னிலம் தாலுக்காவைச் சேர்ந்த கீரனூர் என்ற கிராமத்தில் பல்லவி கோவிந்த நாயனக்காரருக்கும், சுந்தரம்மாள் என்ற அம்மையாருக்கும், 1897ஆம் ஆண்டு ஜனவரி மாதம், இரண்டாவது குமாரனாகப் பிறந்தார், கீரனூர் சகோதரர்களிலொருவரான சின்னத்தம்பிப் பிள்ளை. இவரது இயற்பெயர் சிவசுப்பிரமணியம் என்பதாகும். இவருடைய தமையனான முத்துக்குமரப் பிள்ளை 'பெரியதம்பி' என்றழைக்கப்பட்டதால், சிவசுப்பிரமணியம் 'சின்னத்தம்பி' எனப் பெயர்பெற்று, அதுவே நிலைத்தும் விட்டது. செல்லம்மாள், வேதவல்லி யென்ற இரு தமக்கையரும் இவருக்குண்டு.

சூணம்பேடு ஜமீனில் ஆஸ்தான வித்வானாகவிருந்த தன் தந்தை பல்லவி கோவிந்த நாயனக்காரரிடம் ஆரம்பத்திலும், பின், காஞ்சீபுரத்திலிருந்த தன் தாய் மாமனான சாமிநாத நாயனக்காரரிடமும் சின்னத்தம்பிப் பிள்ளை நாகஸ்வரப் பயிற்சி பெற்றார். காஞ்சீபுரத்திலிருக்கும்போது, லயச்சிம்மமான நாயனாப் பிள்ளையிடம் சில கீர்த்தனைகளைப் பயிலும் வாய்ப்பும் இவருக்குக் கிட்டியது. பின்னர், ஊர் திரும்பி, கீரனூர் முத்து நாயனக்காரரிடம் (இவர் சென்னை கர்நாடக இசைக் கல்லூரியில் நாகஸ்வர ஆசிரியராவிருந்த கீரனூர் ராமசாமிப் பிள்ளையின் தந்தை) தன் கலையை அபிவிருத்தி செய்து கொண்டு, உள்ளூரிலுள்ள சிவபுரிநாதர் ஆலய வழிபாட்டில் நாகஸ்வர சேவை செய்யலானார். அவ்வப்போது வெளிக் கச்சேரிகளும் நடக்க ஆரம்பித்தன. சில காலத்திற்குப்பின், சின்னத்தம்பிப் பிள்ளையும், கீரனூருக்கு மிக அருகாமையிலுள்ள சிறுபுலியூரில் வாழ்ந்து வந்த

கண்ணப்ப பிள்ளையும் ஜோடியாகச் சேர்ந்து கச்சேரிகள் செய்யத் துவங்கிக் "கீரனூர் சகோதரர்கள்" என்ற பெயருடன் பிரபலமாயினர். நாகஸ்வர வித்வான் திருவிடைமருதூர் வீருஸ்வாமி பிள்ளையின் திருமணத்தின்போதுதான் "கீரனூர் சகோதரர்கள்" முதன்முதலாக ஒன்று சேர்ந்தனர் என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது.

"கீரனூர் சகோதரர்"களிலொருவரான கண்ணப்ப பிள்ளையின் பூர்வீகம் பந்தணை நல்லூர் ஆகும். இவரது தாயார் மாரிமுத்தம்மாளுடன், பாட்டியார் சிறுபுலியூரில் குடியேறியவர். கந்தசாமி பிள்ளை—மாரிமுத்தம்மாள் தம்பதியருக்குக் குமாரராக 27-6-1896 அன்று பிறந்தார் கண்ணப்ப பிள்ளை. இவருக்குக் குந்தலாம்பாள் என்றதொரு தமக்கையும், பொன்னையா என்ற தம்பியும் உண்டு. கீரனூர் முத்து நாயனக்காரரிடம் துவக்கிய குருகுலவாஸம் மன்னார்குடி சின்னப்பக்கிரி நாயனக்காரரிடம் பூர்த்தியாகித் தனிக் கச்சேரிகள் செய்து வந்தபோதுதான், முன் கூறியபடி, திருவிடைமருதூரில் சின்னத்தம்பிப் பிள்ளையுடன் சேர்ந்தார்.

சின்னத்தம்பிப் பிள்ளை தன் தமக்கை செல்லம்மாளின் பெண்ணான அம்பாபாய் என்பவரை மணந்து கொண்டார். இந்த அம்மையார் சந்ததியின்றிக் காலமாகி விட்டார். சின்னத்தம்பிப் பிள்ளையின் வாசிப்பில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த நாகஸ்வர வித்துவான் சிதம்பரம் வைத்தியநாத பிள்ளை தன் பெண்ணான சிவகாமு என்பவரை சின்னத்தம்பிப் பிள்ளைக்கு இரண்டாந்தரமாகத் திருமணம் செய்து கொடுத்தார். ஜாதகம் பார்த்தால் ஒருக்கால் பொருத்தமில்லாமற் போய்விடுமோ என்றஞ்சிய வைத்திய நாத நாயனக்காரரர் இருவருடைய ஜாதகங்களையும் பொருத்தம் பார்க்காமலே, இத்திருமணத்தை முடித்தார். சின்னத்தம்பிப் பிள்ளைக்கு இரு பெண்களும், இரு ஆண்களும் சந்ததியாக வுள்ளனர். இப்பெண்கள் இருவருமே பிரபல நாகஸ்வர வித்துவான் திரு மெய்ஞ்ஞானம் நடராஜசுந்தரம் பிள்ளையின் மனைவிகளாவர். குருராமலிங்கம், அருள்வைத்தியநாதன் என்ற குமாரர்களிருவரும் இசைக் கலைஞர்களாய்க் கீரனூரில் வாழ்கின்றனர்.

திருவாரூரையடுத்துள்ள புலிவலத்தைச் சேர்ந்த பாக்கியம் அம்மாள் என்பவரைக் கரம் பிடித்த கண்ணப்ப பிள்ளைக்கு ஒரு பெண்ணும், ஒரு பையனும் உள்ளனர். பட்டம்மாள் என்ற இப்பெண், நாகஸ்வர வித்வான் திருச்சேறை கிருஷ்ணமூர்த்திப் பிள்ளையின் மனைவி. குமாரரான தட்சிணாமூர்த்திப் பிள்ளை புலிவலத்தில் மிராசுதாராயும், கிராம முனிசீப்பாயும் வாழ்ந்துவருகின்றனர். 1932 ஆம் ஆண்டில் கண்ணப்ப பிள்ளை சிறுபுலியூரிலிருந்து புலிவலத்திற்குத் தன் வாசஸ்தலத்தை மாற்றிக் கொண்டார்.

சமமான யோக்கியதையுடைய கலைஞர்களிடையே பொறுமை உணர்ச்சி இயற்கையாக இருந்திராத காலத்தில் வாழ்ந்திருந்துங்கூட, தற்காலத்தில் மிகசகஜமாகக் காணப்படுவதுபோல், அவர்வர்க்கு வேண்டிய நண்பர்களின் அல்லது விசிறிகளின் தூண்டுகோலால், கீரனூர் சகோதரர்களும் மனவேறுபாடு கொண்டவராகிப் பலமுறை பிரிந்து தனித்தனியே கச்சேரிகள் செய்வதும் பின்பு ஒன்று சேர்வதுமாக இருந்ததுண்டு. இவ்விதப் பிரிவுக்காலங்களில் சின்னத்தம்பிப் பிள்ளை, மாயூரம் வண்டிக்காரத்தெரு ஷண்முகசுந்தரம் பிள்ளையைச் சேர்த்துக் கொண்டும், கண்ணப்பபிள்ளை, திருக்கண்ணபுரம் குமாரஸ்வாமிப்

பிள்ளையைச் சேர்த்துக் கொண்டும் வாசித்த கச்சேரிகள் ஏராளம்.

கீரனூர் சகோதரர்கள் ஏராளமான சமஸ்தானங்களிலும், தேவாலயங்களிலும், வாசித்துப் பாராட்டப் பெற்றுள்ளனர். இராமநாதபுர அரசவையில் மதுரை பொன்னுச்சாமி பிள்ளையுடன் இவர்கள் வாசித்ததைக் கேட்டு, மதுரையாரே வியந்து, போற்றியதுண்டு. 1927ல் சென்னையில் நடைபெற்ற அகில இந்திய நேஷனல் காங்கிரஸ் மியூசிக் கான்ஃபரென்ஸில், மதுரை பொன்னுச்சாமி நாயனக்காரருடன் வாசித்து மகாத்மா காந்தி, நேதாஜி ஆகியோரின் பாராட்டுக்களையும், தங்கப்பதக்கங்களையும் பெற்றனர். 1937ல் சென்னை குமரகோட்டத்துப் பூச உத்ஸவத்தில் வாசித்தபோது, இசையறிஞர்களும் ரஸிகர்களும் கூடி, இச் சகோதரர்களுக்கு "சபாரஞ்ஜித சங்கீத பூஷணம்" என்ற விருது வழங்கிக் கௌரவித்தனர். தருமபுரம் போன்ற மடாலயங்களிலும் இவர்களுக்கு ஏராளமான சன்மானங்கள் கிடைத்துள்ளன.

சின்னத்தம்பிப் பிள்ளை நாகஸ்வரத்தில் மட்டுமின்றி, வாய்ப்பாட்டிலும், தவில், கஞ்சிரா முதலிய வாத்தியங்களை வாசிப்பதிலும் வல்லவராயிருந்தார். சிவபுரிநாதர் ஆலய நித்திய பூஜா காலங்களில், பல சந்தர்ப்பங்களில் தவில் வாசித்துள்ள சின்னத்தம்பிப் பிள்ளையிடம் தவிலில் வாசிப்பதற்கான கோர்வைகள், நடைகள் பலவற்றைத் தான் தெரிந்துகொண்டதாகத் தவில் வித்வான் நாச்சியார்கோயில் ராகவப் பிள்ளை என்னிடம் கூறியுள்ளார். கீரனூர் சகோதரர்களின் 'கரஹரப்ரியா பல்லவி' இசைத்தட்டில் நாச்சியார் கோயிலார் வாசித்துள்ள தனிஆவர்த்தன மோரா, சின்னத்தம்பிப் பிள்ளையின் கற்பனையிலெழுந்ததே.

மாலையில் வாய்ப்பாட்டுக் கச்சேரியும், இரவு நாகஸ்வரக் கச்சேரியுமாகப் பல விடங்களில் சின்னத்தம்பிப் பிள்ளை நிகழ்த்தியுள்ளார். இவரது மாமனூரான சிதம்பரம் வைத்தியநாத பிள்ளை, நாச்சியார் கோயில் ராகவப் பிள்ளை போன்றோர் இவருடைய வாய்ப்பாட்டுக் கச்சேரிகளில் கஞ்சிரா வாசித்திருக்கின்றனர். வடலூர் இராமலிங்க சுவாமிகளிடமும், திருவருட்பாவிலும் ஈடுபாடுமிக்க சின்னத் தம்பிப் பிள்ளை பல 'வள்ளலார் விழா'க்களில் பாட்டுக் கச்சேரியும், நாகஸ்வரக் கச்சேரியும் செய்திருப்பதோடன்றிக் கீரனூரில் இராமலிங்க சுவாமிமடம் ஒன்றை, தானே நிறுவிப் பிரதி ஞாயிறுதோறும் வார வழிபாடு, அருட்பா பாராயணம் முதலியவற்றை, தொடர்ந்து நடத்தி வந்திருக்கிறார்.

கீரனூர் சகோதரர்களுக்குப் பெருஞ்சேரி கோவிந்தஸ்வாமி பிள்ளை, காரைக்கால் பழனிவேலுப் பிள்ளை, திருக்கடையூர் சின்னையா பிள்ளை, நீடாமங்கலம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, விராலிமலை முத்தையா பிள்ளை, திருச்செங்காட்டாங்குடி ருத்ராபதிப் பிள்ளை, மன்னார்குடி நடேசபிள்ளை, காவாலக்குடி சோமுப் பிள்ளை, கும்பகோணம் தங்கவேல் பிள்ளை, நாச்சியார் கோயில் ராகவப் பிள்ளை போன்ற தவில் மேதைகள் தவில் வாசித்துள்ளனர்.

இரண்டு நாகஸ்வரங்களும் இணைந்து ஒரே நாகஸ்வரம் போன்ற ஒலி விசேஷத்துடன், கேட்போரைப் பரவசப்படுத்திய மிகச் சில நாகஸ்வரக் கலைஞர்களில், கீரனூர் சகோதரர்கள் முக்கிய இடம் பெற்றவர்கள். தந்தி வாத்தியமான வயலினைப் போன்ற த்வனியை உணர்த்தும் தன்மைபெற்ற இவர்களுடைய வாசிப்புக்கு, இவர்கள் உலகிற்கு வழங்கியுள்ள இசைத்தட்டுகள் சில, 'மாதிரி' களாக

நின்று சான்று பகருகின்றன. "பாகாய னய்ய" போன்ற விவாதி மேளராகக் கிருதிகளை நாகஸ்வரத்தில் முதன்முத லாகக் கையாண்ட பெருமை இவர்களையே சாரும். முந்தைய தலைமுறையினரும், இன்றைய முதியோரான ரஸிகர்களும், இவர்களின் வாத்தியச் சிறப்புப் பற்றி வெகுவாகச் சிலாகித்துப் புகழ்வர்.

இவ்விருவரில் முக்கிய நாகஸ்வரக் காரர், இணைந்து வாசிக்கும் 'ஜோடி' நாகஸ்வரக்காரர் என்ற வேறுபாடு இருந்ததில்லை. இருவருமே முக்கிய நாகஸ்வரக் காரர்களாக வாழ்ந்து இசை மழை பொழிந்து வந்தனர் ஒருவரை யொருவர் பெயர் சொல்லித்தான் அழைத் துக் கொள்வது வழக்கம்.

கண்ணப்ப பிள்ளையின் ராக ஆலா பனையில், மன்னார்குடி சின்னப் பக்கிரி நாயனக்காரருடைய வாசிப்பின் சாயல் இழைந்திருக்கும். அவரது ஆலாபனை, அதற்குண்டான எல்லா லட்சணங்களும் பொருந்தியதா யிருக்கும். ஸ்வரம், பல் லவி வாசிப்பதில் சின்னத்தம்பிப் பிள் ளைக்கு ஈடு அவரே. அதேபோல, சின்ன தம்பிப் பிள்ளையின் ராகமும், கண்ணப்ப பிள்ளையின் ஸ்வரமும், சற்றுந் தரங்குறை யாமலே சிறந்திருந்தன. உருப்படி வாசித்தல் என்ற சொத்துக்கோ, இரு வருமே சம பாகஸ்தர்கள்.

கீரனூர் சகோதரர்களின் கலைத் திற மைக்கு எடுத்துக் காட்டாக ஒரு முக்கிய சம்பவத்தை இங்கே குறிப்பிடுதல் அவ சியம். 1921ல் மஹா வித்வான் பிடில் கோவிந்தஸ்வாமி பிள்ளை மருமகனுக்கு திருச்சியில் திருமணம் ஏற்பாடாகி இருந் தது. பெண் அழைப்புக்கு கீரனூர் சகோ தரர்களின் நாகஸ்வரம் ஏற்பாடு செய் திருந்தார் கோவிந்தஸ்வாமி பிள்ளை. மாலை 7மணி அளவில் ஊர்வலம் புறப்பட ஸகல ஏற்பாடுகளும் சித்தமாயின. நாகஸ் வர வித்வான்களின் வரவை எதிர் பார்த்து நின்றார் பிள்ளையவர்கள். எதிர் பாராத விதமாக அவருக்கு தந்தி ஒன்று கைக்கெட்டியது. வெளியூர்களில் கச்சேரி களை முடித்துக்கொண்டு கீரனூர் சகோத ரர்கள் ரயில் பிரயாணம் செய்துகொண் டிருந்தார்கள். மாலை 6மணிக்கு திருச்சி சந்திப்பை அடையவேண்டிய ரயில் 3மணி நேரம் கால தாமதமாக வந்துகொண் டிருந்தது கீரனூர் சகோதரர்களையே எதிர் நோக்கிக் காத்திருந்தால் பெண் அழைப் புக்கு அகாலமாகிவிடும்; இரவு 10மணிக் குத்தான் ஊர்வலம் புறப்பட வேண்டி வரும். உள்ளூர் நாகஸ்வர வித்வான் களும் வெளியூர் வித்வான்களும் பலர் வாத்தியங்களுடன் வந்திருந்தார்கள். ஆனால் கீரனூர் சகோதரர்கள் எவ்வளவு நேரங்கழித்து வந்தாலும் காத்திருக்க உறுதிசெய்துவிட்டார் கோவிந்தஸ்வாமி பிள்ளை. கீரனூர் சகோதரர்கள் ஓடோ டியும் 9மணிக்கு மேல் தயக்கத்துடன் வந்து சேர்ந்தார்கள்; பிழையை பொறுத் தருள வேண்டுமென்று பிள்ளையிடம் மன்றாடினார்கள். பெண்ணை அழைக்கும் ஊர்வலம் தங்களுக்காகவே காத்திருப்ப தைக் கண்டு மேலும் அதிர்ச்சி கொண் டார்கள். 'கோவிந்தசாமி அண்ணா' தங்க ளிடம் வைத்திருக்கும் மதிப்பைக் கேட்ட தும் அவர்களது கண்களில் ஆனந்த பாஷ்பம் பொங்கிவிட்டது. அன்று அவர்கள் பொழிந்த கானம் கோவிந்த ஸ்வாமி பிள்ளைக்கே அர்ப்பணம்!

திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளை, திருவீழிமிழலை சகோதரர்கள், செம்பொன்னார் கோயில் சகோதரர்கள் போன்ற சிறந்த பல சக கலைஞர்களின் மதிப்பை, கீரனூர் சகோதரர்கள் பெற்றி ருந்தனர். சின்னத்தம்பிப் பிள்ளையின் மறைவு குறித்து ஒரு அனுதாப மலரே

அச்சடித்து வெளியிட்டுத் தன் அன்பையும், மதிப்பையும் உணர்த்தியிருக்கிருர் திருவாவடுதுறையார். இவ்விதம் அவர் வேறு யாருக்கும் செய்திருப்பதாகத் தெரியவில்லை.

சின்னத்தம்பிப் பிள்ளையிடம் நாகஸ்வரம் பயின்ற பலரில் வேதாரணியம் வேதமூர்த்தி பிள்ளை, திருமாகாளம் சோமாஸ்கந்தபிள்ளை (இவர் தற்சமயம் பழனி நாகஸ்வரக் கல்லூரியில் ஆசிரியராக இருக்கிருர்), அம்பல் ராமச்சந்திர பிள்ளை, யாழ்ப்பாணத்திலிருந்த சீர்காழி திருநாவுக்கரசுப் பிள்ளை முதலியோர் குறிப்பிடத் தக்கோராவர். யாழ்ப்பாணம் நல்லூர் முருகையா பிள்ளை, யாழ்ப்பாணம் அப்புலிங்கம் பிள்ளை முதலியோர் கண்ணப்ப பிள்ளையின் புகழ்மிக்க சீடரிற் சிலர்.

ஞானவான்களான ரஸிகர்களைத் தம் இசையால் ஈர்த்து சுகானுபவமளித்த கீரனூர் சகோதரர்களில், சின்னத்தம்பிப் பிள்ளை 9-3-1942 அன்று கீரனூரில் இறையருட் ஜோதியிற் கலந்தார். பெருந்துயருற்ற கண்ணப்ப பிள்ளை இச்செய்தி அறிந்து, இருதயவலியால் அவதியுற்று விழுந்து, சின்னத்தம்பிப் பிள்ளையின் இறுதி ஊர்வலத்திற் கலந்துகொள்ள முடியாதவரானர். அதிலிருந்தே, மனமும் வெறுத்து, உடலும் நலிவுற்று, நாகஸ்வரத்தைத் தொடாமலே இருந்துவிட்ட கண்ணப்ப பிள்ளை புலிவலத்தில் 13-7-1944 அன்று இறைவனடி நிழலில், சின்னத்தம்பிப் பிள்ளையுடன் ஜோடி சேர்ந்து கொண்டார்.

இச் சகோதரர்களின் மறைவு இசையுலகுக்குப் பேரிழப்பு என்ருல் மிகையாகாது.


Grams : "MIDLAND" Phone : 22491 (3 Lines)

***VISIT***

***The Historical Temple of Madurai***

***Where to stay?***

***STAY AT:***

**HOTEL MIDLAND**

A DELICIOUS HOME AWAY FROM HOME

**70, DHANAPPA MUDALI STREET, MADURAI-I.**

*PROPRIETORS:*

VD. M. RM. M. RM. MUTHIAH CHETTIAR & SONS.

சங்கீத வித்வான்

# மன்னார்குடி ராஜகோபால பிள்ளை



ரா. கிருஷ்ணமூர்த்தி

மன்னார்குடி இராஜகோபால பிள்ளை அவர்கள் 1892ம் ஆண்டு ஜூன் மீ 4உ இசை வேளாளர் மரபிலே இசையும் நாட்டியமும் கலையாகக் கொண்ட திரு. சிங்காரவேலு தனத்தம்மாள் தம்பதியருக்கு 3வது குமாரராகப் பிறந்து இளமையில் தேசிய உயர்நிலை பள்ளியில் கல்விபயின்று சிறந்து விளங்கி வருங்கால் தனது 9வது வயதிலேயே கேள்வி ஞானத்தால் பாடும் ஆற்றலை அடைந்தார். அவரது குடும்பம் இசைக் குடும்பம் ஆனபடியால் எட்டயபுரம் திரு. ராமசந்திர பாகவதர் அவர்கள் சிஷ்யர்களான பிள்ளை அவர்களின் ஒன்றுவிட்ட தமக்கை திருமதி. முத்துக் கண்ணம்மாள், பிடில் வித்வானை அவரது தமையனார் திரு. கோவிந்தசாமி பிள்ளை அவர்களிடமும் சிட்சை பயின்று 12வது வயதிலேயே கச்சேரி செய்யும் திறமை படைத்து விட்டார். அவரது ஆற்றலைக் கண்ட மன்னார்குடி நாதஸ்வர வித்வான் சின்ன பக்கிரியாபிள்ளை அவர்களும் இசைநுணுக்கங்களைப் போதித்து அவரது 13வது வயதிலேயே கச்சேரி செய்யத் துவங்கி விட்டார்கள். நாதஸ்வர வித்வான் சின்ன பக்கிரியாபிள்ளை அவர்கள் நாதஸ்வரத்தில் கையாளும் பிரக்காக்களை பிள்ளை அவர்கள் சுலபமாக பாடிவிடுவார் இராகம் பாடுவதில் தனக்கென்று தனி பாணி வகுத்துக்கொண்டு பாடி கீர்த்தனைகளை சங்கதிகள் விடாமல் பாடி ஸ்வரங்கள் பாடுவதில் வல்லுனரானார். அவரது சகோதரிகள் திருமதி கண்ணம்மாள், மகாலெக்ஷிமி பரத நாட்டியத்தில் வல்லுனர்கள். அவர்கள் பரத நாட்டியத்தில் கையாளும் பதங்களைப் பிள்ளை அவர்கள் கச்சேரிகளில் நிறைய பாடுவதோடு ஷி பதங்களுக்கு ஸ்வர சாகித்யம் எழுதிப் பிற்காலத்தில் அவரது மாணாக்கர்களுக்கும் போதித்தார்கள்.

அவரது முதல் கச்சேரி மன்னார்குடியில் காலஞ்சென்ற நிலப் பிரபுவும் சங்கீத ரசிகருமான திரு. கருப்பையா முதலியார் அவர்களின் மைத்துனர் திருமணத்தில் நடைபெற்றது. அதிலிருந்து பிள்ளை அவர்கள் பணத்திற்காகக் கச்சேரி செய்தாலும் ஆத்மீகத் துறையில் ஏராள கச்சேரிகள் செய்ய ஆரம்பித்தார்கள். 1912ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. அவருக்கு நான்கு குமாரர்களும் ஒரு குமாரத்தியும் உள்ளனர். 1914ம் ஆண்டு முதல் பிள்ளை அவர்களுக்கு அக்காலத்தில் இசை உலகப் பெரியார்களான

திரு. காஞ்சிபுரம் நாயனப்பிள்ளை அவர்கள், மலைக்கோட்டை கோவிந்தசாமி பிள்ளை, தக்ஷிணமூர்த்தி பிள்ளை, அழக நம்பியா பிள்ளை, ஜலதாங்கம் ரமணய்யா செட்டியார், வீணைவிதூஷி திருமதி. தனம் அம்மாள், அன்னாரது குடும்பத்தைச் சேர்ந்த திருமதி லெக்ஷிமிரத்னத்தம்மாள் முதலியோருடைய ஆசியினால் இசை உலகில் மேலும் பிரகாசிக்கத் தொடங்கினார்கள். அக் காலத்தில் உண்டான எல்லா சங்கீத சபையிலும் கச்சேரிசெய்து பிரக்யாதி அடைந்தார்கள். வருடந் தோறும் திருவையாற்றிலும் காஞ்சிபுரம் மற்றும் இதர இடங்களில் நடைபெறும் சத்குரு தியாகப்பிரம்ம உற்சவங்களிலும் மற்றும் ஆத்திக உற்சவம் நடக்கும் இடங்களிலும் கச்சேரி செய்து ரசிகர்கள் பாராட்டைப் பெற்றார்கள். அவரது இராகம் பாடும் தன்மையை குறித்து அவருக்கு காக்கிநாடா, சங்கீத சபையினர் 1928ம் ஆண்டில் 'ராகரெத்ன' என்ற பட்டத்தை அளித்துள்ளார்கள். 1932ம் வருடம் '**Broad Cast**' என்கிற கிராமபோன் கம்பெனியாரின் சுமார் 6 இசைத்தட்டுகளுக்கு குரல் கொடுத்திருக்கிறார்கள். அவரது இசைத் திறனைக் குறித்து திரு. நாதஸ்வர வித்வான் டி. என். ராஜரத்தினம் பிள்ளை, திருப்பாம்புரம் டி. என். சுவாமிநாத பிள்ளை, வித்வான் மகாராஜபுரம் விஸ்வநாதய்யர், அரியக்குடி ராமானுஜ அய்யங்கார் போன்றோர் புகழ்ந்திருத்கிறார்கள். பிள்ளை அவர்களுக்கு ஏராளமான சிஷ்யர்களும் சிஷ்யைகளும் உண்டு. அவரது அபிமான மாணவரான மதுரை திரு. சோமு அவர்கள், பிள்ளை அவர்களின் பாணியைப் பின்பற்றுகிறாகள்.

1937ம் ஆண்டு பலபேர் வேண்டுகோளுங்கிணங்க பிள்ளை அவர்கள் தனது வாசஸ்தலத்தை தஞ்சைக்கு மாற்றிக் கொண்டு அநேக சிஷ்யர்களுக்கு சாஸ்திரோக்தமாகவும் கர்னாடக சுத்தமாகவும் சிக்ஷைகள் பயிற்றி வாழ்ந்து வந்தார்கள். அங்குள்ள தியாகபிரம்ம சங்கீத சமாஜத்தின் தலைவராகப் பணியாற்றினார்கள். இவ்வாறு 13 ஆண்டுகள் பணியாற்றி 1950ம் ஆண்டு ஜுன் மாதம், அண்ணாமலை இசைக் கல்லூரியில் பேராசிரியாக இருந்தவரும் பிள்ளை அவர்களுக்கு நெருங்கிய சகாவான திரு. சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் முயற்சியாலும் ராஜா சர். டாக்டர் திரு. முத்தைய செட்டியார் அவர்கள் ஆதரவாலும் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழக இசைக் கல்லூரியில் ஆசிரியராக நியமிக்கப்பட்டு சுமார் 18 வருடம் தமிழிசையிலும் கர்னாடக சங்கீதம் வளர்வதற்கும் பிரயாசை எடுத்துக்கொண்டு வாழ்ந்தார்கள். அவருக்குத்தமிழ் இசை ஆர்வத்தால் பல தமிழ்ப் பாடல்களுக்கு ஸ்வரம் அமைத்துப் போதித்தார்கள். அடிக்கடி அகில இந்திய ரேடியோ நிலையத்திலும் கச்சேரிகள் நிகழ்த்தினார்கள். அவருடன் ஆசிரியராகப் பணியாற்றிய குடந்தை திரு. கே. எஸ். சிவவடிவேல் பிள்ளை, தஞ்சாவூர் திரு. டி. எஸ். ராமதாஸ்ராவ் போன்றோர்கள் பிள்ளை அவர்களுக்கு பக்க வாத்யங்கள் வாசித்து நன்மதிப்பை ஈந்தார்கள். அவருக்கு எல்லா வித்வான் களிடமும் நன்மதிப்பும் மரியாதையும் உண்டு. அவரைப் பாராட்டாத இசை வல்லுனர்கள் எவரும் இலர். அடக்கம், நல்லபண்பு இறைவனிடத்தில் ஆர்வம் எல்லாம் படைத்து நிம்மதியாக வாழ்ந்து 1960ம் வருடம் இசைக் கல்லூரியிலிருந்து ஓய்வு பெற்று மன்னைக்கு வந்து சுமார் 6 மாதம் வாழ்ந்து 1961ம் வருடம் பிப்ரவரி மீ 1உ காலமானார்கள்.

அன்னாரது ஆத்மா சாந்தி அடைக.

*With best compliments from*

# MADURA SOUTH INDIA CORPORATION PRIVATE LIMITED

*Wholesalers & Retailers*

**IRON AND STEEL**

80, SEMBUDOSS STREET,

MADRAS-600001.

Telephone : 23291, 22725 Telegrams : "MUSIC"




*With the best compliments from*

# B. B. HOTEL

the modern luxury home for quality non-vegetarian dishes.

# HOTEL GURU

for luxurious rooms with all modern amenities: centrally situated.

**RAJA STREET, COIMBATORE-1**

*Proprietors.* K. S. M. GURUSWAMY NADAR & SONS

*With best compliments from:*

# K. P. V. SHAIK MOHAMED ROWTHER & COMPANY PRIVATE LTD.,

MERCHANTS, SHIPPING AGENTS, STEVEDORES, SHIP CHANDLERS AND CLEARING AND FORWARDING AGENTS

41, LINGHI CHETTY STREET,

MADRAS-600001

*AGENTS FOR:*

THE SHIPPING CORPORATION OF INDIA LTD.,

BANGLADESH SHIPPING CORPORATION

ESSO EASTERN INC.

DEMPO STEAMSHIPS LTD.,

**Cable Address:** "SHAIK"

**Telephone:** 25756 (3 Lines)

Shipindia (Coastal) (Overses) ^ v Shipping Corporation of India Ltd.,

**Telex:** Shaik Ms. 7123
Shipindia MS. 200

*Branches at:*

**NAGAPATTINAM, KAKINADA, MASULIPATNAM, GUNTUR.**

தந்தி : ராஜா　　தபால் பெட்டி : 139　　போன் : 22668

# P. A. ராஜு செட்டியார் & பிரதர்

"ஸ்வர்ண மாளிகை"

பெரிய கடை வீதி :: கோயமுத்தூர் - 1

கியாரண்டியுள்ள 22 கியாரட் தங்க நகைகள்
வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்

P.A.R.

## "*Service is our Motto*"

Honesty, Integrity, Skill, Courage

If you offer these securities we are ready to give financial aid.

More Savings → More Capital for Investment →

Economic Development + Social Welfare

By joining our various Savings Schemes, Co-operate

with us in fulfilling our objectives!

BANK OF MADURA LTD.

திருமலை-திருப்பதி ஸ்ரீ வெங்கடேசுவர ஸ்வாமி வாரு ஆஸ்தான பிரதான நாதஸ்வர வித்வான் ஸ்ரீ வில்லிப்புத்தூர் ஸ்ரீ நாச்சியார் தேவஸ்தான நாதஸ்வர வித்வான், திருவாடுதுறை ஆதீன வித்வான், திருவனந்தபுர அரண்மனை வித்வான், தர்மபுர ஆதீன வித்வான், நாதஸ்வர வித்வ சிரோன்மணி, இசை குணமணி, மத்யார்ஜுன மஹாநாதமணி, ஸங்கீத கலாநிதி, கலாசிகாமணி கலைமாமணி

இசைப் பேரறிஞர்

# பி. எஸ். வீருசாமி பிள்ளை

அவர்களைப் பற்றிய பாராட்டுரைகள்

தோற்றம்: 1901 மறைவு: 21-4-73

## பேரிழப்பு

வழுவூர் இராமையா பிள்ளை அவர்களின் பாராட்டுரை: "பெரம்பலூர் உயர் திரு. வீருசாமி பிள்ளை 1901-ம் ஆண்டு பிறந்தார். அவருடைய தந்தை பி. வி. சுந்தரம் பிள்ளை. உடன் பிறந்த சகோதரர்கள் மூவர். நாயனுப் பிள்ளை, சிவக்கொழுந்து பிள்ளை, வேணுகோபால் பிள்ளை, தந்தை ஆகியாரிடம் இசைப் பயிற்சி பெற்றுர். கோனேரி ராஜபுரம் வைத்தியனுதையர், திருப்பாம்புரம் நடராஜசுந்தரம் பிள்ளை, மலைக்கோட்டை கோவிந்தசாமி பிள்ளை, வீணை தனம்மாள் ஆகியோரிடம் பக்தி விசுவாசம் உள்ளவர்.

இந்தத் தலைமுறையிலும் முன் தலைமுறையிலும் பிரபலமாக விளங்கிய செம்பொன்னர் கோயில் ராமசாமி பிள்ளை, திருவிடைமருதூர் சிவக்கொழுந்து பிள்ளை, திருவாடுதுறை ராஜரத்தினம் பிள்ளை, மதுரை பொன்னுச்சாமி பிள்ளை ஆகிய வித்வான்களுடன் ஒன்று சேர்ந்து வாசித்து வித்வான்களின் பாராட்டுதலையும் ரசிகப் பெருமக்களின் நன் மதிப்பையும் பெற்றுர். சிறந்த பல இசை மேதைகளின் சங்கீதத்தை யெல்லாங் கேட்டு உணர்ந்து அதன் சாராம்சங்களைத் தன் கலையின் வாயிலாகப் பிரகாசிக்கச் செய்தார். அநேகமாகத் தமிழ் நாட்டில் அவர் வாசிக்காத இடமே இல்லை. திருவாங்கூர், கொச்சி சமஸ்தானங்களிலும் தேவாலயங்களிலும், 1964-ல் காஞ்சி காமகோடி பெரியவாளிடமும பட்டம், பதவிகளைப் பெற்றுர். 1966-ல் பிள்ளைக்கு இந்திய ஜனதிபதியின் விருது அளிக்கப் பட்டது.

பிள்ளை தமிழிசையில் மிகவும் பற்றுள்ளவர். சென்னை தமிழ் இசைக் கல்லூரி, பழனி தேவஸ்தான நாதஸ்வரக் கல்லூரி, திருவையாறு நாதஸ்வரக் கல்லூரிகளுக்கு பல ஆண்டுகள்வரை கௌரவ முதல்வராகப் பணிபுரிந்து நன் மதிப்பைப் பெற்றுர்.

இவருடைய மாணவர்களில் இவரது அடிச்சுவட்டைப் பற்றி வருபவர்களில் தலைசிறந்தவர் திருவிடை மருதூர் P. S. V. ராஜா. மற்றொரு மாணவர் அம்பலப்புழை சங்கர நாராயண பணிக்கர்.

கடைசி மூச்சுவரையில் வீருசாமி பிள்ளை திருப்பதி ஆண்டவனுக்குப் பணி செய்து சென்ற ஏப்ரல் மாதத் திருவிழாவின் இடையில் பிள்ளை யவர்கள் இறைவன் திருவடியை அடைந்தார். இவருடைய பிரிவு சங்கீத உலகிற்கும் தமிழிசைக்கும் பேரிழப்பாகும்."

* * *

## தூண் விழுந்தது

"பிரபல நாதஸ்வர வித்வான திருவிடைமருதூர் பி. எஸ். வீருசாமி பிள்ளையின்

மரணம் கர்நாடக சங்கீத உலகுக்கு ஒரு பெரும் நஷ்டமாகும். இந்த நாட்களில் நாதஸ்வரத்தை மேல் நாட்டு இசைக் கருவிகளைப்போல் வாசிப்பதில் சிலர் பெருமை கொள்ளுகிறார்கள். ஆனால், வீருசாமி பிள்ளை தனது கடைசி மூச்சு உள்ளவரை கர்நாடக சம்பிரதாயத்தி லிருந்து கொஞ்சம்கூட வழுவாமல் சுத்த மாக வாசித்துக்கொண்டிருந்தவர். வாத்தி யத்தில் நாதத்தை எழுப்புவதுடன் அவர் திருப்தி யடைவதில்லை. சாஹித்தியங் களின் ஒவ்வொரு அட்சரமும் வாசிப்பில் இடம் பெறவேண்டும் என்று வற்புறுத்து வார். அப்போதுதான் கிருதிகளை பாவம் குன்றாமல் வாசிக்க முடியும் என்று அவர் கருதினார். நாதஸ்வரக் கலைஞர்கள் சாஹித்தியங்களை அட்சர சுத்தமாகப் பாடம் பண்ணவேண்டும் என்றும் அவர் கண்டிப்பாகச் சொல்லிக்கொண் டிருந் தார். நாதஸ்வரக் கலை வீருசாமி பிள்ளைக்கு அவருடைய தந்தை கொடுத்த பரம்பரைச் சொத்து. அவருடைய வாசிப்பு, பழைய தோரணையிலேயே இருந்ததற்கு இதுவும் ஒரு காரணமாகும். அந்தக்காலத்து சங்கீத மேதைகளான கோனேரிராஜபுரம் வைத்யநாதய்யர், மலைக்கோட்டை கோவிந்தசாமி பிள்ளை ஆகியவர்களிடமும் அவர் பாடம் கேட்டி ருக்கிறார். வயது காரணமாக சமீப காலத் தில் அவரது வாசிப்பை அதிகமாகக் கேட்க முடியவில்லை. ஆனால், வீருசாமி பிள்ளையின் வாத்தியத்தைக் கேட்டவர்க ளுக்கு அது என்றும் நினைவிருக்கும். பழைய தலைமுறையின் தூண் விழுந்து விட்டது. அவருடைய ஆத்மா சாந்தி யடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம். அவருடைய குடும்பத்தினருக்கு நமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளு கிறோம்."

—'தினமணி' தலையங்கம் (22-4-73)

## சின்ன பக்கிரியை நினைப்பூட்டியவர்

பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி "வீரு சாமி பிள்ளை சிறந்த நாதஸ்வர வித்வான். அவரே ஒரு நிறுவனத்துக்கு சமானம். அவர் வாசிப்பதைக் கேட்பதற்கு இனிமை யாக இருக்கும். அதோடு விரலசைவுகள் பிராசீனமான வழியில் அமைந்திருக்கும். சங்கீதத் துறையில் அவர் மகா சூரன். மன்னார்குடி சின்னபக்கிரி போன்ற பெரிய நாதஸ்வர வித்வான்களுக்கு சரி நிகர் சமானமாக விளங்குபவர்" என்று கூறினார்.

"அவர் தேர்ந்த சங்கீத ஞானி. சங்கீத மகாநாட்டு விவாதங்களில் மிகுந்த அக்கறை செலுத்திவந்தார். ஸ்ரீ பழனி யாண்டவர் தேவஸ்தானமும், திருவை யாறு கல்லூரியும் நடத்திய நாதஸ்வர பள்ளிகளில் முறையான பயிற்சிக்கு வழி அமைத்துத் தந்தார்.

"நாதஸ்வரம் கற்கும் மாணவர்கள் சாஹித்தியங்களை அட்சர சுத்தமாகப் பயில வேண்டும் மென்று வற்புறுத்தி வந்தார். அப்போதுதான் கீர்த்தனை களின் பாவம் குன்றாமல் வாசிக்க முடியும் என்பது அவர் நம்பிக்கை. (நாதஸ்வரத் தில் துத்துகாரம் மூலமே பாட்டுகளை வாசித்து விடுகிறார்கள் என்பது பொது வாகக் கூறப்படும் குறை.)

நாதஸ்வர வித்வான்களின் மதிப்பை நிலைநாட்டுவதற்குப் பெரிதும் பாடு பட்டவர்" என்றும் பேராசிரியர் கூறினார்.

* * *

சங்கீத கலாநிதி செம்மங்குடி ஆர். ஸ்ரீனிவாச அய்யர் "மிகவும் பழமையான மகா நாதஸ்வர வித்வான்களில் ஒருவ ராவார் வீருசாமி பிள்ளை. சங்கீத உல குக்கு அவரது மறைவு ஈடு செய்ய முடி யாத இழப்பு ஆகும். என்னுடைய பழைய இசை நண்பனை இழந்து விட்டதைக் குறித்து, பெரிதும் துக்கம் அடைந்தேன்" என்று கூறினார்.

# தமிழிசைக் கல்லூரி தென்சென்னைக் கிளை

## விஜயதசமி 6-10-73 மாலை 6 மணி அளவில்

### பத்மபூஷண், இசைப்பேரறிஞர்

## ம. ப. பெ. தூரன் அவர்களின் தொடக்க உரை

முதலில் விஜயதசமிக்கான மனமார்ந்த வாழ்த்துக்களை இங்கு குழுமியிள்ள அனை வருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று ஒரு மங்களகரமான நாள். இன்று அம்பிகை மஹிஷாஸுரனை வென்று ஜயக்கொடி நாட்டிய நன்னாள். ஆகவேதான் அம்பிகை மஹிஷாஸுர மர்த்தனி என்றும் விஜயாம்பிகை என்றும் துதிக்கப்படுகிறாள். இந்த நாளிலே எந்த நல்ல பணியைத் தொடங்கினாலும் பெரிய வெற்றி காணும் என்று கருதித் தொடங்குவது வழக்கம். இந்த முறையில்தான் தமிழிசைச் சங்கத்தார் தமிழிசைக் கல்லூரியின் தென் சென்னைக் கிளையை இன்று தொடங்க எண்ணினார்கள். தமிழிசைக் கல்லூரிக்கு கௌரவ முதல்வர் (Honorary Principal) இசைப் பேரறிஞர் பாலக்காடு மணி அய்யர் அவர்கள். அவரைப் பற்றி எல்லாருக்கும் நன்றாகத் தெரியும். அதிகமாக அவரைப் புகழ்ந்தால் அதை அவர் விரும்பமாட்டார்; குறைச்சலாகச் சொல்ல எனக்கு சம்மத மாகாது. அவர் நந்திபகவான் அவதாரம். அவர் மிருதங்கம் வாசிப்பதே ஒரு தனிவகை. லயத்தோடு இசையைப் பொழிகிறாரா அல்லது லயத்தை மட்டும் அற்புதமாக அள்ளி வீசு கிறாரா என்று குறிப்பிட்டுச் சொல்வது கடினம். பாடகரின் கற்பனைகளை முன்கூட்டியே எதிர் பார்த்துப் பொருத்தமாக அவர் வாசிப்பது அனைவரையும் பிரமிக்கச் செய்யும். அவருடைய விரல்களில் அமுதத்துளிகள் சொட்டும். அப்படி அழகாக மிருதங்கம் வாசிப்பார். அவருக்கு சதாகாலமும் மிருதங்கத்தின் நினைவைத் தவிர வேறு நினைவு கிடையாது. அவர் ஹானரரி பிரின்ஸிபால் பதவி ஏற்று, சில ஆண்டுகளாக நமக்கு மிகவும் பெருமை அளித்து வருகிறார்.

இத்தென் சென்னைக்கிளையை நடத்த பத்ம பூஷண் திருமதி. M. L. வஸந்தகுமாரி அவர் களும் Visiting principal ஆக நமக்கு வாய்த்தது அதிருஷ்ட வசம். அவருடைய பெயர்ப் பொருத்தம் போலவே அவருடைய இசையும் பல மணங்களோடு குழைந்து வரும் வாசம் போன்றது. தலைசிறந்த பெண் பாடகிகளில் ஒருவரான இவர் இப்பள்ளிக்கு விஸிடிங் பிரின்ஸிபாலாக வாய்த்தது நாம் மேற்கொண் டிருக்கும் நோக்கத்தின் வெற்றிக்கு ஓர் அறி குறி. ஹானரரி பிரின்ஸிபால், விஸிடிங் பிரின்ஸ்பால் பதவி வகிக்கும் இருவரும் இங்கேயே நம்முடன் நாள்தோறும் இருந்து பணிசெய்வது இயலாது என்று நாம் அனை வரும் அறிந்த விஷயம்தான். புகழ் பெற்ற நமது இசையை உலகத்தின் பல பாகங் களிலும் பரப்பவேண்டிய கடமை உள்ளவர்கள், ஓர் இடத்திலேயே தங்கி விடமுடியாது. எவ்வெப்போது அவர்களுக்கு ஓய்வு கிடைக் குமோ அவ்வப்போது அவர்கள் நம்முடன் இருந்து வழிகாட்டுவார்கள். அதிலேயே நமது இசைப்பள்ளி ஓங்கி வளரும்.

எதற்காகத் தமிழ் இசைப் பள்ளி ஒன்று தென் சென்னையில் தோன்ற வேண்டும்? அதன் நோக்கம் என்ன? என்று நீங்கள் நினைக்கலாம். மற்ற மொழிகளோடு போட்டி இடுவதற்காக இது தொடங்கப்படுவதன்று. தொடக்க நாள் முதல் போட்டி இடவேண்டும் என்ற எண்ணமே இந்த சங்கத்தாருக்குக் கிடையாது. இதுவரை நடைபெற்ற தமிழ் இசை விழாக்களில் பங்கு கொண்ட பெரிய வித்வான்களின் பெயர் வரிசைகளையும். நிகழ்ச்சி நிரல்களையும் அலசிப் பார்ப் போமானால் எந்த மொழிக்கும் தமிழிசை

இயக்கம் பகைமையோ, போட்டியோ கொண்ட தில்லை என்பது தெளிவாகத் தெரியும். ஆனால் தமிழ் நாட்டில் தமிழில் பாடினால் பெரும் பாலோர் ரசிக்க முடியும் என்ற உண்மையை யாரும் மறுக்க முடியாது.

இந்தத் தமிழ் பாடல்கள் எப்போது தோன்றின, தமிழிசையின் தொன்மை என்ன என்று ஆராய முயன்றால் இலேசாக இவற்றை அறுதியிட்டுக் கூற முடியாது. தமிழிசை ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முன்பே வளர்ச்சி பெற்றதற்கு அகச் சான்றுகளும் இலக்கியச் சான்றுகளும் பல உள்ளன. அண்மையில் பஞ்ச மரபு என்ற இசைத் தமிழ் நூல் வெளிவந்துள்ளது. கண்ட மரபு, வாச்சிய மரபு, நிருத்திய மரபு, அபிநய மரபு, தாள மரபு ஆகிய ஐந்து மரபுகளின் இலக்கணத்தையும் விவரிக்கும் நூல். இது இந்நூலின் ஆசிரியரான அறிவனார் என்பவர் மதுரையில் மூன்றாவது சங்கத்தைத் தொடங்கிய முடத்திருமாறன் என்னும் பாண்டிய அரசன் காலத்தவராவர். இப்படிப் பட்ட இலக்கண நூல்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியிருக்கிற தென்றால் அதற்கும் முன்பாகத் தமிழ் இசை எவ்வளவு செழித்து வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும்!

பின்னர் தமிழ் நாட்டில் தோன்றிய இசைக்குக் கர்னாடக இசை என்று ஏன் பெயர் வந்தது என்று நீங்கள் கேட்கலாம். வழக்கில் நெடுங்காலமாக இருந்த இசையை நமது நாயன்மார்களும் ஆழ்வார்களும் ஏழாவது நூற்றாண்டு தொடங்கியே புது முறையில் வளர்த்தார்கள். அக்காலத்தில் இந்தியா முழுவதும் ஒரே இசைதான் வழங்கிற்று. அப்பொழுது இந்த இசைக்குத் தனிப்பட்ட பெயர் வேண்டிய தேவையே இருக்கவில்லை. அந்நியர்களாகிய முகலாயர் இந்தியாவின்மீது படையெடுத்து வந்தபோது வட இந்தியாவில் அந்நிய இசையைப் புகுத்தினார்கள். அரசாங்க செல்வாக்குடன் அந்நிய இசை வட நாட்டில் வளர்ந்தது. ஆகவே தென்னாட்டில் தொடர்ந்து வழக்கிலிருந்த நம் இசைக்கு கர்னாடக இசை என்று மற்றவர்கள் பெயரிட்டார்கள்.

கர்னாடக இசை என்ற பெயர் வந்த காரணத்தை ஒரு சிறிய உதாரணத்தால் விளக்க விரும்புகிறேன். நடமாடும் தெய்வமாக நாம் வணங்கிவரும் காஞ்சிப் பெரியவாள் கல்கி பத்திரிகையில் எளிமையாகவும், தெளி வாகவும் பல கட்டுரைகளை எழுதி வருவது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். அவர் எழுதிய ஒரு கட்டுரையின் தலைப்பு "பெயர் இல்லாத மதம்" என்பது. அதாவது நமது மதத்திற்கு 'இந்து மதம்' என்று பெயரே கிடையாது. சிந்து நதியைக் கடந்து வந்த வெளிநாட்டவர் இங்கே உள்ளவர்களுக்கு இந்துக்கள் என்று பெயர் சூட்டினார்கள். அவர்களுடைய மதத்தை இந்து மதம் என்று அழைத்தனர். மற்றொரு உதாரணம். தெலுங்கு மொழியில் தமிழ் நாட்டிற்கு அரவ நாடு என்று பெயர். அது தெலுங்கு நாட்டிற்கு அருகில் உள்ள தமிழ் நாட்டின் ஒரு பகுதி. இப்போது கூட மைசூருக்கு "கர்னாடகம்" என்ற பெயர் உருவாகியுள்ளது. ஆகவே வட நாட்டினர் தமக்கு அருகில் உள்ள கர்னாடக நாட்டைப் பார்த்து அங்கும் அதற்குத் தெற்கிலும் உள்ள இசைக்கு கர்னாடக இசை என்று பெயரிட்டு அழைத்தனர். அருகில் உள்ள நாட்டைக் கொண்டே பெயரிடுவது மக்கள் இயல்பு.

தமிழ் இலக்கணத்தில் தமிழ் மொழியை மூன்று பிரிவுகள் கொண்டதாக வகுத்தார்கள். அதாவது, இயல், இசை, நாடகம் என்ற பிரிவுகள் அவை. இசைக்குத் தனிப்பட்ட பெயரை அன்று சூட்டவில்லை. வெளி நாட்டவர் சூட்டிய பெயரே கர்னாடக இசை என்பது. நாயன்மார்களும், ஆழ்வார்களும் பாடிய பாட்டுகள் பதிகங்களாக அமைந்தவை. ஒவ்வொரு பதிகத்திலும் உள்ள பாடல்கள் ஒவ் வொன்றும் ஒரே வகையில் பாடும்படியாக அமைந்திருந்தன. பின்னர் இசை மேலும் வளர்ச்சியுற்றது. பதினாறும் நூற்றாண்டில் தோன்றிய முத்துத்தாண்டவர் காலத்திலேயே கீர்த்தனை வடிவம் ஏற்பட்டது. சங்கீத மும்மூர்த்திகளும் கீர்த்தனை வடிவத்தில் சிறப் பாகப் பாடினர். பாட்டுகளின் அமைப்பில் பல்லவி. அநுபல்லவி, சரணம் என்ற பகுதிகளை இவர்களெல்லாம் புகுத்தினார்கள். பதிமூன்றும் நூற்றாண்டின் இறுதியிலும், பதிநான்காம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த புரந் தரதாஸர், ஆயிரக்கணக்கான பாடல்களை உருவாக்கி நமது இசையை வளம்பெறச் செய்தார். அவருக்குப் பிறகு முத்துத்தாண் டவர் தோன்றியவர். அவரைத் தொடர்ந்து

மாரிமுத்தாப்பிள்ளை, பதினெட்டாம் நூற்றுண்டின் பிற்பகுதியிலும், பத்தொன்பதின் முற்பகுதியிலும் வாழ்ந்தவர். தியாகராசரும் மற்றவர்களும், ராகங்களின் சாரத்தைப் பிழிந்து பல்லவி, அனுபல்லவி, சரணம் ஆகிய மூன்று பகுதிகளிலும் விரவி நமது இசையைச் செழிக்கச் செய்தார்கள். ஆகவே கர்னடக இசை என்பது தமிழிசையன்றி வேறல்ல.

நமது தேசிய கவி பாரதியாரும் தமிழிலே பாட வேண்டும் என்பதை வற்புறுத்திக் கூறியுள்ளார். தமிழ் சபையிலே மக்கட்குப் புரியாத பாஷையில் பாடல்களைப் பாடுவது ஞாயமில்லை என்று அவர் தெளிவாக எடுத்துரைக்கின்ருர். தமிழர்கள் பூர்விக மகான்களின் இசையைக் கற்றுக்கொண்டு பிறகு புதிய தமிழ்ப் பாடல்களை பாடினுல் நமது இசை வளரும் என்பது அவர் கருத்து.

''Music means rhythm and other. Its effect is electrical. It immediately soothes but like our sasthras music has been the prerogative of the few'' என்று காந்தியடிகள் கூறியுள்ளார். அவருக்கு அதிகாரம் மட்டும் இருந்தால் இசையைப் பொதுமக்களின் உடைமையாக்கத் தயங்கமாட்டார் என்றும் சொல்லியிருக்கிருர்.

எல்லாரும் இசையை அனுபவிக்கும்படி செய்ய வேண்டியது நம்முடைய கடமை. இதற்குத் தாய் மொழியில் உள்ள பாடல்கள் தான் ஏற்றவை. இந்தக் கருத்தையே தமிழ இசைச் சங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இப்பொழுது நமது இசைக்கு ஒரு புதிய விதமான தொல்லையும் ஏற்பட்டிருக்கிறது. என்னுடைய சிறிய அனுபவத்தை இந்த சமயத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நேற்று அமைதியான ஒரு கோயிலில் வழிபாட்டிற்குப் போயிருந்தேன். அங்கே மெல்லிசை என்ற பெயருடன், ஒரு வல்லிசை ஆர்மோனியத்தின் துணை கொண்டு ஒலமிட்டுக் கொண்டிருந்தது. அம்பாள் கோவிலை விட்டு ஓடும்படியாக அங்கு பாட்டு அமர்க்களமாக நடந்துக் கொண்டிருந்தது. ஒலி பெருக்கி இதை இன்னும் பல மடங்கு அதிகப் படுத்திக் கோயிலின் அமைதியையே குலைத்துக் கொண்டிருந்தது.

இதுபோன்ற வல்லிசை ஒரு சமூகத்தின் நுட்பமான இசை அறிவை அழித்து விடும். நமது இளைஞர்கள், இந்த ஆபத்தில் சிக்காமல் தப்பவேண்டும். நமது நுட்பமான இசையின் ருசியைத் தாய்ப்பாலுடன் ஊட்டி வளர்க்க வேண்டும். இல்லையானுல் வயது முதிர்ந்த பின் அதை ஊட்டி வளர்க்கமுடியாது. நமது இசையின் இந்த நுட்பத்தைத் தெரிந்த வராதலால் நமது இசைப் பேரறிஞர் பாலக்காடு மணி அய்யர் அவர்கள் ஒலி பெருக்கியுள்ள அரங்கில் வாசிக்க மறுத்து வருகிருர்.

முதலில் இளைஞர்களைக் கவர்ச்சி செய்தல் நமது இசைக்குச் செய்யும் பெரிய தொண்டாகும். அமெரிக்கர்கள் பலர் நமது இசையில் ஈடுபட்டு இந்தியாவுக்கு வந்து கற்கிருர்கள்; நமது இசைவாணர்களை அமெரிக்காவுக்கு அழைத்துச் சென்று ஆதரிக்கிருர்கள். ஆனல் நாம் நம் இசையைப் புறக்கணித்து வருகிரேம். மற்றெரு விபரீதம்—நமது சங்கீத சபைகள் பாட்டுக் கச்சேரிகளையும் நாட்டியங்களையும் விட்டு நாடகங்களையே அதிக அளவில் நடத்தி வருகிருர்கள். நான்கு நிகழ்ச்சிகளில் மூன்று நிகழ்ச்சிகள் நாடகங்கள்; ஒரே ஒரு பாட்டுக் கச்சேரி! இல்லையானுல் அங்கத்தினர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கிருர்கள்; வசூல் ஆவது இல்லை. இந்தச் சீர் கேடு நீடிக்கக் கூடாது. இந்தப் போக்கை மாற்றுவதற்கு Music Academyயும் தமிழிசைச் சங்கமும் ஒத்துழைக்க வேண்டிய காலம் வந்துவிட்டது. அப்படி ஒத்துழைக்க வேண்டிய நிலைமை இன்று ஏற்பட்டிருக்கிறது. நமது இசையைக் காப்பாற்ற இதுவே வழி. இந்த சிறந்த பணிக்கு தமிழிசைக் கல்லூரியின் தென் சென்னைக் கிளை பேருதவியாக இருக்குமென்று நான் நம்புகிறேன். மயிலாப்பூர் நமது இசைக்குப் பெரிய கோட்டை. மயிலாப்பூர் புண்ணிய பூமியில்தான் இசைப் பேரறிஞர் பாபநாசம் சிவன் அவர்கள் ஆயிரக்கணக்கான தமிழ்ப் பாடல்களை உருவாக்கினுர்கள். இந்த நல்ல நாளில் அவரை நினைப்பது அவசியம் அவர் மறையவே இல்லை; அவர் அமரர்; நிலைத்து என்றும் நிற்கக் கூடிய பல கீர்த்தனைகளை அவர் இயற்றியிருக்கிருர். அவர் வாழ் நாளில் இசைத் தொண்டிலும் பஜனையிலும் கண்ணுங் கருத்துமாக இருந்தவர். அவர் வாழ்ந்த இந்தத் திருமயிலையில் மணி அய்யரவர்களையும் வசந்தகுமாரி அவர்களையும்.

துணையாகக் கொண்டு ஆரம்பிக்கும் கல்லூரிக்கு வேறென்ன பக்க பலம் தேவை?

தமிழ் இசைச் சங்கத்தின் செயலாளர்களில் ஒருவர் திரு. T. S. கச்சாபிகேச முதலியார் அவர்கள்; முதுமைப்பருவம் அடைந்தும் ஆர்வம் குன்றுதவர். மற்றவரான திரு. M. A. சிதம்பரம் செட்டியார் அவர்கள் செயல் வீரர்: எள் என்பதற்குள் எண்ணெய் தயாராகி விட்டதா என்று கேட்கக் கூடியவர். இந்த உண்மையை நேரில் பார்க்க விரும்புபவர்கள் அவர் தூத்துக்குடியில் நிறுவியுள்ள தொழிற் சாலையில் குறித்த நாளில் உற்பத்தி தொடங்க வேண்டும் என்ற முயற்சியை எவ்வளவு சுறு சுறுப்புடன் செய்து வருகிருர் என்பதைப் பார்க்க வேண்டும். அவருக்குப் பொறுப்புகள் பல; ஆகவே இந்தக் கல்லூரியில் முழுக் கவனத்தையும் செலுத்த இயலாது. ஆகவே அவரது அருமை மகள் சீதா ஆச்சி அவர்களிடமும் திரு. ஸ்ரீராமன் அவர்களிடமும் இக் கல்லூரிப் பொறுப்பை ஒப்படைத்துள்ளார். ஸ்ரீமதி சீதா ஆச்சி அவர்கள் இசைப்பயிற்சி பெற்றிருப்பதோடு இசையை வளர்ப்பதில் மிகுந்த ஆர்வம் உடையவர்கள்.

திரு. ஸ்ரீராமன் அவர்கள் அதிகம் பேச மாட்டார். ஆனுல் செயல் வீரர். அவர் கிரிக்கெட் விளையாட்டிற்கு மிகப் பெரிய ஏற்பாடுகள் செய்து பலருடைய பாராட்டுதலைப் பெற்று வருவதே அவருடைய திறமைக்கு நல்ல எடுத்துக்காட்டாகும். இன்னெரு முக்கியமான திட்டமும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இளம் வித்துவான்களை ஊக்குவித்துத் தமிழிசைக்கு பெரும் ஆதரவு தேடும் வகையில் மாதாந்திர கச்சேரிகளும் இங்கு ஏற்பாடு செய்யப்போவது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

இந்தக் கல்லூரியில் தேவார இசைக்கு முதல் இடம் கொடுத்திருக்கும் திட்டம் மிகவும் பாராட்டத்தக்கது. தேவாரப் பதிகங்கள் ஆயிரக்கணக்கில் உள்ளன. அவற்றைப் போதிக்க நமக்கு திரு. V. சோமசுந்தரம் கிடைத்திருப்பது பெரு வாய்ப்பாகும். அவர் இசையரசு, இசைப்பேரறிஞர், தண்டபாணி தேசிகர் அவர்களின் பிரதம சீடர். தேசிகர் அவர்களும் ஆதியில் ஓதுவாராகப் பணி செய்து, பிறகு முறைப்படி கர்னுடக சங்கீதம் பயின்றவர். இதைத் தொடர்ந்து மற்ருெரு மகிழ்ச்சிக்குரிய செய்தியும் இருக்கின்றது. தேவாரப் பயிற்சிக்கு ஊக்கம் தரும் வகையில் போட்டி நடத்துவதற்காக பத்மஸ்ரீ திரு. வைத்திய சுப்பிரமணிய அய்யர் அவர்கள் ரூ. 2,000/= நன்கொடை வழங்கியுள்ளது மிகவும் போற்றத்தக்கதாகும். அவர் விடுத்துள்ள செய்தியில்:

"I am particularly happy that the Tamil Isai Sangam is starting a Branch School for South Madras at the place bearing the name of its Founder, Dr. Raja Sir Annamalai Chettiar Viz., Raja Annamalaipuram. To express my happiness and to commemorate this occasion I am sending herewith a cheque for Rs. 2,000/- in favour of the President of the Tamil Isai Sangam. I request that this amount may be kept as an endowment styled "The Rani Meyyammai Tevaram Prize Endowment". This cheque is being sent from the Edayathamangalam Avibhaktha Vaidyanatha Iyer Trust the interest out of which may kindly be utilised for a prize or prizes to be given on the opening day of the Tamil Isai Festival every year for the best musician competing in Tevaram recitation."

